

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | நவம்பர் 07, 2013 | புரட்சி 12 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00

## மோடியின் வரலாற்று உளறல்கள்

பா.ஜ.க. பிரதமர் வேட்பாளராக வலம் வரும் மோடி - அவ்வப்போது கூட்டங்களில் உதிர்த்து வரும் வரலாற்று உளறல்கள் பற்றிய ஒரு தொகுப்பு:

+ தண்டியில் காந்தி உப்பு சத்தியாகிரகம் நடத்தியபோது, இங்கே வேதாரண்யத்தில் வ.உ.சி. தலைமையில் உப்பு சத்தியாகிரகம் நடந்தது. **– திருச்சிக் கூட்டத்தில் மோடி**

  வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்துக்கு தலைமை தாங்கியது வ.உ.சி. அல்ல; இராஜ கோபாலாச்சாரி.

+ குப்தர் வம்சம் பற்றி நாம் நினைக்கும்போது உடனடியாக சந்திரகுப்தரின் ராஜநீதிதான் நினைவுக்கு வருகிறது. **– பாட்னா கூட்டத்தில் மோடி**

  சந்திரகுப்தர், குப்த வம்சத்தைச் சார்ந்தவர் அல்ல; அவர் மவுரிய வம்சத்தைச் சார்ந்தவர்.

+ மாவீரன் அலெக்சாண்டர் இராணுவம், உலகத்தையே படையெடுத்து வெற்றிக் கண்டது. ஆனால், பீகார் தக்சசீலாவில் பீகாரி களால் அதே இராணுவம் தோல்வி அடைந்து ஓடியது. அதுதான் பீகாரிகள் வலிமை. **– மோடி பாட்னா பேச்சு**

  அலெக்சாண்டர் இராணுவம் கங்கையைக் கடந்து வரவே இல்லை. பீகாரிகளால் தோற்கடிக்கப்படவும் இல்லை. தக்சசீலாவும் பீகாரில் இல்லை; அது பாகிஸ்தானில் இருக்கிறது.

+ திட்டக் குழுவுக்கு தலைமை தாங்கும் பிரதமர் ஒரு பொருளாதார நிபுணர். நாளொன்றுக்கு கிராமத்தில் குடும்ப வருமானம் ரூ.26-க்கு அதிகமாகவோ அல்லது நகரத்தில் ரூ.32க்கு அதிகமாகவோ இருக்குமானால், அவர்கள் வறுமைக் கோட்டை கடந்து விட்டதாக கூறுகிறார். இது ஏற்கக் கூடியது தானா? **– கான்பூரில் மோடி**

  திட்டக்குழு இந்த வரையறையை ஒரு குடும்பத்துக்குச் சொல்லவில்லை. தனி மனிதருக்குச் சொல்கிறது. அத்துடன் மோடி குறிப்பிடுவதுபோல் வருமானத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவில்லை. செலவின் அடிப்படையில் தான் திட்டக் குழு நிர்ணயித்துள்ளது.

+ வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது நாட்டின் வளர்ச்சி வீதம் 8.4 சதவீதமாக இருந்தது. இப்போது அய்க்கிய முன்னணி ஆட்சியில் 4.8 சதவீதம்தான். **– மோடி**

  வாஜ்பாய் ஆட்சியில் முதல் 6 ஆண்டில் சராசரி வளர்ச்சி 7 சதவீதம். கடைசி 5 ஆண்டு சராசரி வளர்ச்சி 5.9 சதவீதம் என்று மறுத்துள்ளார் ப.சிதம்பரம்.

+ குஜராத் பெற்றுள்ள வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சி. **– டெல்லி பல்கலையில் மோடி**

  மனித மேம்பாட்டு குறியீடுகளின்படி குஜராத் சுகாதாரத்தில் 16 ஆவது மாநிலமாகவும், கல்வி யில் 14 ஆவது மாநிலமாகவும் கட்டமைப்பு வசதிகளில் 11 ஆவது மாநிலமாகவும் இருக்கிறது.

+ பட்டேல் இறுதி ஊர்வலத்தில் நேரு கலந்து கொள்ளவில்லை. **– மோடி**

  நேரு கலந்து கொண்டார். 'டைம்ஸ் ஆப் இந்தியா' உள்ளிட்ட நாளேடுகள் இந்த செய்தியை வெளியிட்டுள்ளன. மொரார்ஜி தேசாய் தனது சுயசரிதையிலும் குறிப்பிட் டுள்ளார்.



## சென்னை தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம்

# சேலம் சிறையில் கொளத்தூர்மணி - கழகத் தோழர்கள்

இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தி, சென்னை மயிலாப்பூர், மந்தைவெளி யிலுள்ள தபால் நிலையங்களைத் தாக்கியதாக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் உமாபதி, மயிலைப் பகுதித் தோழர்கள் இராவணன், மனோகரன், மாரி ஆகியோர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 120(பி) (குற்றவியல் சதி) மற்றும் பிரிவு 285 (அலட்சியமாக தீப் பொருளை கையாளுதல்) மற்றும் தமிழ்நாடு அரசின் பொதுச் சொத்தை சேதப்படுத்தும் சட்டத்தின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

அடுத்த நாள் கொலை முயற்சி என்ற மற்றொரு குற்றப் பிரிவு சேர்க்கப்பட்டது. வெள்ளிக் கிழமை மாநகர ஆணையர் ஆணையின் கீழ் தேசியப் பாதுகாப்புச் சட்டம் போடப்பட்டு, புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

தொடர்ந்து இதே கோரிக்கைக்காக சேலம் வருமானவரி அலுவலக வளாகத்தில் சாக்குப் பையில் கெரசினை நனைத்து வீசினார்கள் என்ற குற்றச் சாட்டில் தோழர்கள் அருண்குமார், பி.கிருஷ்ணன், பி.அம்பிகாபதி ஆகியோர் வெள்ளியன்று கைது செய்யப்பட்டனர்.

சனியன்று விடியற்காலை 2 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மேட்டூரில் உள்ள அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்டார். சென்னை தோழர்கள் மீது போடப்பட்ட பிரிவுகளின் கீழ் (கொலை முயற்சி தவிர) வழக்கு தொடரப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை அருண் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். கழகப் பொருளாளர் இரத்தினசாமி பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் திங்கள் கிழமை கழகத் தலைவர் கொளத்தூர் மணியைச் சிறையில் சந்தித்துப் பேசினர்.

# கைதுக்கு வைகோ–சீமான் கண்டனம்

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கை:

2.11.2013 அன்று அதிகாலை 2 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணியை அவரது இல்லத்தில் காவல்துறையினர் கைது செய்து விடியற்காலை 4 மணிக்கெல்லாம் மாஜிஸ்திரேட்டு முன்னிலையில் ஆஜர்படுத்தி ரிமாண்ட் உத்தரவைப் பெற்று பொழுது விடிவதற்குள்ளாகவே சேலம் மத்திய சிறையில் அடைத்து விட்டனர். இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்தி, இராஜபக்சேவை அடுத்த 2 ஆண்டுகளுக்கு காமன்வெல்த் அமைப்பின் தலைவராக்க இந்திய காங்கிரஸ் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிலையில், தமிழக மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக சிலர் சிறிய வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் செயலில் கொளத்தூர் மணிக்கும் எனக்கும் உடன்பாடு கிடையாது. ஆனால், இச்செயலில் ஈடுபட்டதாக சிலரை சென்னை போலீசார் கைது செய்துள்ளனர். அவர்கள் சட்டப்படி வழக்கை எதிர்கொள்வர். ஆனால், இந்த சம்பவத்துக்கு எள்ளளவும் தொடர்பில்லாத கொளத்தூர் மணியை வெள்ளிக்கிழமை நடுநிசிக்கு பின்னர் போலீசார் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர். பொய் வழக்குகளுக்கும், ஏவப்படுகிற அடக்குமுறைக்கும் நாங்கள் அஞ்சப் போவதில்லை.

நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கை:

நவம்பர் 1-ந் தேதி, சேலம் வணிக வரித் துறை அலுவலகத்தின் மீது பெட்ரோல் குண்டு வீச்சு வழக்கில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டிருப்பது பேரதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இசைப் பிரியாவிற்கு சிங்கள பேரினவாத இலங்கை அரசு இழைத்த கொடூரச் செயல்களை இங்கிலாந்தின் சேனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டு இருப்பதைக் கண்டு உலகத் தமிழினம் கொதித்து, வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், கொளத்தூர் மணியை தமிழக காவல்துறை கைது செய்திருப்பது வெந்தப் புண்ணில் வேல் பாய்ச்சும் நிகழ்வாக அமைந்து விட்டது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து கோரிக்கை விடுத்தும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் இயற்றப்பட்டும்கூட மத்திய காங்கிரசு அரசு தமிழர்களை கிள்ளுக்கீரையாக நினைத்து அலட்சியப்படுத்தி வருகிறது. இலங்கையில் நடைபெற உள்ள காமன்வெல்த் மாநாட்டிற்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் கொளத்தூர் மணியின் போராட்டங்களை முடக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் தான், நள்ளிரவு 2 மணிக்கு அவசர அவசரமாக தமிழக காவல்துறை அவரை கைது செய்து இருக்கிறது. இதனை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.

**மத்திய அரசை எதிர்த்தே போராட்டம் - விடுதலை இராசேந்திரன் அறிக்கை (4 ஆம் பக்கம்)**

# நவம்பர் 7 – ஜாதி ஆதிக்க எதிர்ப்பு நாள்

## தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம்

நவம்பர் 7 ஆம் தேதி மாவட்டத் தலைநகர்களில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு தோழர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தமிழக அரசே!

நத்தம் காலனி, நாயக்கன் கொட்டாய், கொண்டாம் பட்டி கிராமங்களை எரித்த குற்றவாளிகள் மீதான வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்று!

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப் பட்ட கிராமங்களிலேயே சிறப்பு நீதிமன்றம் அமைத்து, கிராமங்கள் எரிப்பு, இளவரசன் கொலை உள்ளிட்ட அனைத்து வழக்குகளையும் விசாரணை செய்!

பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 ஏக்கர் விவசாய நிலம் வழங்கு! அப்பகுதியிலேயே அவர்களின் வாழ்வாதாரத்திற்காக தொழிற்சாலை அமைத்திடு!

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மறு வாழ்வுப் பணிகளை நிறைவேற்று! அழிக்கப்பட்ட வீடுகளை உடனடியாகக் கட்டிக் கொடு!

ஜாதி வெறியைத் தூண்டி, தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஊர்க் கட்டுப்பாடுகளை விதித்து வரும் ஜாதியக் கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடு!

வன்முறைத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய ஜாதி ஆதிக்க சக்திகளின் உடைமைகளைப் பறிமுதல் செய்!

கவுரவக் கொலைகளைத் தடுத்திட சிறப்புச் சட்டத்தை இயற்றிடு!

ஜாதி மறுப்புக் காதலர்களுக்குப் பாதுகாப்பு வழங்கு! ஜாதி மறுப்பு இணையர்களின் குழந்தை களுக்கு ஜாதியற்றோர் இடஒதுக்கீடு வழங்கிடு!

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**தலையங்கம்**

## நேர்மையற்ற வாதங்கள்!

இலங்கையில் நடைபெறும் 'காமன்வெல்த்' நாடுகளின் மாநாட்டுக்கு இந்தியா சென்று, அந்த அரசின் மனித உரிமை மீறல்களை எடுத்துச் சொல்ல வேண்டும்; அதைப் புறக்கணிப்பது தவறு என்று ஒரு வாதம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. வெளியுறவுத் துறை அதிகார வட்டாரங்கள் இதில் மிகவும் தீவிரம் காட்டி வருகின்றன. இந்த வாதங்களில் நேர்மையோ, உண்மையோ இல்லை. காமன்வெல்த் நாடுகளின் மாநாடு இலங்கை மனித உரிமை மீறல்கள் பற்றியோ, போர்க் குற்றங்கள் பற்றியோ பேசுவதற்காகவோ கூடவில்லை. காமன்வெல்த் நாடுகளின் பெரும் தொழில் நிறுவனங்கள் இலங்கையில் தொழில் வணிக முதலீடுகளை செய்வது குறித்து விவாதிப்பதுதான் இந்த மாநாட்டின் முதன்மையான நோக்கம். நாட்டின் தலைவர்கள் சந்திப்பைவிட அதைத் தொடர்ந்து நடக்கும் தொழிலதிபர்களின் சந்திப்புதான் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த மாநாட்டை இந்தியா புறக்கணிப்பதால் இந்தியாவுக்கு எந்தப் பின்னடைவும் ஏற்பட்டுவிடப் போவதும் இல்லை.

போர்க் குற்றம் இனப்படுகொலை குற்றங்களை சுமந்து நிற்கும் ஒரு நாட்டில் காமன்வெல்த் தலைவர்கள் கூடலாமா என்பது ஒரு அடிப்படையான கேள்வி. இந்த மாநாடு நடக்கும் நாட்டின் அதிபரே அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு காமன்வெல்த் தலைவராக நீடிப்பார் என்ற மரபு பின்பற்றப்படுகிறது. இனப்படுகொலை செய்த நாட்டின் அதிபருக்கு இந்த மகுடத்தைச் சூட்டலாமா என்பது அடுத்த கேள்வி!

இலங்கையுடனான உறவை இந்தியா துண்டித்துக் கொண்டால் தொடர்ந்து தமிழர் பிரச்சினையில் எப்படி அழுத்தம் தர முடியும் என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது. காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணித்துவிட்டதாலேயே இலங்கையுடன் உள்ள உறவு துண்டிக்கப்பட்டுவிடுமா என்று கேட்க விரும்புகிறோம். அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தீர்மானம் வந்தபோது, அதை ஆதரித்து வாக்களித்த நாடுதான் இந்தியா! அதனால் இலங்கையுடனான உறவு துண்டிக்கப்பட்டுவிட்டதா, என்ன? வடக்கு மாகாணத்தில் இலங்கை தேர்தலை நடத்தியதற்குக் காரணமே இந்தியா தான் என்று வடக்கு மாகாண முதல்வர் விக்னேசுவரன் மீண்டும் மீண்டும் கூறி வருகிறாரே! அய்.நா.வில் இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களித்தப் பிறகுதானே, இதுவும் சாத்தியமாகியிருக்கிறது?

வடக்கு மாகாண முதல்வர் விக்னேசுவரன், தமிழர் பகுதியைப் பார்வையிட இந்தியாவின் பிரதமர் நேரில் வரவேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதியதை ஒரு ஆங்கில நாளேடு தனது கருத்துக்கேற்ப திரித்து வெளியிட்டது. 'காமன்வெல்த்' மாநாட்டுக்கு வர வேண்டும் என்பதே வடக்கு மாகாண முதல்வரின் விருப்பம் என்பதுபோல் அந்த ஏடு தனது கருத்தை அம்மாநில முதல்வர் மீது திணித்தது. தாம் பிரதமரை அழைத்தது, தமிழர் பகுதிக்குத் தானே தவிர, காமன்வெல்த் மாநாட்டுக்கு அல்ல என்று, அம்மாநில முதல்வர் இப்போது தெளிவுபடுத்திவிட்டார்.

இலங்கையை இந்தியா பகைத்துக் கொண்டால், சீனா, இலங்கையில் கால் ஊன்றி விடும் என்று வெளிநாட்டுத் துறை அதிகாரிகள் வட்டாரம் கூறி வருகிறது. ஏற்கனவே இலங்கையில் சீனா ஆழமாகக் கால் ஊன்றித்தான் நிற்கிறது. தொழில் மற்றும் வணிகங்களில் சீனாவின் முதலீடுகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மிகப் பெரும் துறைமுகக் கட்டுமானப் பணியே சீனாவுக்கு தரப்பட்டுள்ளது. இந்த வெளி விவகாரத் துறை 'மேதாவிகள்' தங்களது 'ராஜதந்திர' மூளைகளால், இவற்றையெல்லாம் ஏன் தடுக்க முடியவில்லை என்று கேட்க விரும்புகிறோம்.

காமன்வெல்த்தைப் புறக்கணிப்பது என்பது இலங்கைக்கு, இந்தியா தரும் மற்றொரு அழுத்தம் தானே தவிர, இலங்கையோடு அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் துண்டித்துக் கொள்வது அல்ல. இப்போதும் சீனாவோடும், பாகிஸ்தானோடும் இந்தியா பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டு தானே இருக்கிறது? எங்கோ இருக்கிற கனடா நாட்டின் அதிபர் புறக்கணிக்கிறார். ஆனால், நேரடியாக தொடர்புடைய இந்தியா, அதில் பங்கேற்க வேண்டும் என்பது தமிழர் தேசிய இனத்துக்கு இழைக்கப்படுகிற தேசிய அவமானம்!

தமிழினத்தின் உணர்வுகள் அறுபட்டாலும் கவலையில்லை. இலங்கையுடன் உள்ள அரசியல் உறவு துண்டிக்கப்படவே கூடாது என்பதுதான் இந்திய தேசிய பார்ப்பனியத்தின் கருத்து என்றால், இந்தியாவுடனான தமிழர்கள் உறவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை தானே உருவாகும்?

### உள்ளத்தை உலுக்கும் இசைப்பிரியா இறுதி நாள் காட்சிகள்

# இலங்கைக்கு கடும் நெருக்கடி

விடுதலைப் புலிகள் தொலைக்காட்சியின் செய்தி அறிவிப்பாளர் இசைப்பிரியாவை இலங்கை இராணுவம் நிராயுதபாணியாக பிடித்து, சித்திரவதை செய்து, பாலியல் வன்முறைக்குள்ளாக்கி கொலை செய்தக் காட்சிகளை லண்டனிலுள்ள 'சேனல்-4' தொலைக்காட்சி வெளியிட்டவுடன், வழக்கம்போல, 'போலி காட்சிகள்' என்று இலங்கை அரசு மறுத்துள்ளது.

இசைப் பிரியா - போரின்போதுதான் கொல்லப்பட்டார் என்று இலங்கை அரசு சாதித்தது. இலங்கை பாதுகாப்புத் துறை வெளியிட்ட போரில் கொல்லப்பட்டவர்கள் பட்டியலில் இசைப் பிரியா பெயரும் இடம் பெற்றிருந்தது. 'சேனல் 4' தொலைக்காட்சிக்காக 'ஸ்ரீலங்கா: கொலைக் களம்' என்ற படத்தைத் தயாரித்த லண்டன் பத்திரிகையாளரும், படத் தயாரிப்பாளருமான கல்லம் மக்ரே, இதை மறுத்துள்ளார். 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (நவ. 2) அவரது பேட்டியை வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ காட்சிகள் உண்மையானவை என்பது இலங்கை அரசுக்கே தெரியும். இன்னும் இதுபோல் பல காட்சிகள் வெளிவர இருக்கின்றன என்று அவர் கூறியுள்ளார். இதைப் படம் பிடித்தவர்களே இலங்கை இராணுவத்தினர் தான். அவைகளை இலங்கை இராணுவமே கண்டுபிடித்து சேகரிக்கத் தொடங்கியிருக்கிறது.

இப்போது வெளியிட்டுள்ள காட்சிகள் எங்களுக்கு அப்போதே கிடைத்தது என்றாலும் உண்மையானதுதானா என்பதை உறுதிப்படுத்தி, ஆய்வு சோதனைகளுக்கு உட்படுத்திப் பிறகு வெளியிட்டுள்ளோம். பிரிட்டன் நீதிமன்றத்துக்காகவும், சர்வதேச நீதிமன்றங்களுக்காகவும் இதுபோன்ற காட்சிப் பதிவுகளை, ஆவணங்களை சோதிக்கக்கூடிய நிறுவனங்களிடம்தான் நாங்கள் இந்த வீடியோ காட்சிகளையும் சோதனைக்கு உட்படுத்துகிறோம். காட்சிகள் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளதா; 'எடிட்' செய்வதில் முறைகேடுகள் நடந்துள்ளனவா, தொடர்ச்சி இருக்கிறதா, ஒளியில் மாறுபாடுகள் இருக்கிறதா என்பதையெல்லாம தொழில்நுட்ப ரீதியில் ஆராய்ந்து உறுதி செய்கிறார்கள்.

காமன் வெல்த் மாநாடு நடக்க இருக்கும் நேரத்தில் இது வெளியிடப்பட்டதற்காக நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன். இப்படி முக்கிய நிகழ்வுகள் நடக்கும்போதுதான் வெளிவர வேண்டும். இந்த காட்சிகளில் பெரும்பாலானவை அய்.நா.விடமே இருக்கிறது. அய்.நா. அவற்றை சோதனைக்கு உட்படுத்தி, பாதுகாத்து வைத்திருக்கிறது. நாங்கள் உலகத்தின் பார்வைக்கு கொண்டு வருகிறோம். இன்னும் இதுபோல் பல காட்சிகள் வரும் என்கிறார் கல்லம் மக்ரே.

இசைப் பிரியாவின் இந்தக் கொடூர கொலைக் காட்சி உலகம் முழுவதையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இலங்கை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. நிதியமைச்சர் ப. சிதம்பரம், இந்த காட்சிகள் உண்மை என்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார். மத்திய அமைச்சர் வாசன், காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், பாதுகாப்பு அமைச்சர் அந்தோணியிடமிருந்தும் எதிர்ப்பு வந்துள்ளது.

அடுத்த சில நாட்களில் சேனல் 4 தொலைக் காட்சி தயாரித்த 'நோ பயர் சோன்' ஆவணப் படத்தை அத் தொலைக்காட்சி முழுமையாக வெளியிட இருக்கிறது. அந்தப் படம் வெளிவரும் போது அது இலங்கைக்கு மேலும் கடும் நெருக்கடிகளை உருவாக்கும்.

'இசைப் பிரியாவின் இறுதி நிமிடங்கள் காட்சி - இந்தியப் பிரதமருக்கு அழுத்தத்தைக் கொடுக்கும்; இந்தக் காட்சிகள் எழுப்பும் கேள்விகளைத் தவிர்த்துவிட்டு காமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்துவது கடினம்' என்று தமிழ் 'இந்து' நாளேடும் எழுதியுள்ளது. 'இந்து' ஏடு, இந்தியா காமன் வெல்த் மாநாட்டில் பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் ஏடு என்பது குறிப்பிடத்தக்கது.

## வடகலை–தென்கலை அய்யங்கார் பார்ப்பனர்கள் 'குடுமிபிடி' சண்டை

வைணவத்தில் வடகலை அய்யங்கார் பார்ப்பனர்களுக்கும், தென்கலை அய்யங்கார் பார்ப்பனர்களுக்கும் இடையிலான மோதல் இன்றும் தீர்ந்தபாடில்லை.

கடலூர் அருகே திருவந்திபுரத்தில் உள்ளது புகழ் பெற்ற தேவநாத சாமி கோயில். பல்வேறு இடங்களிலிருந்து மக்கள் இக்கோவிலுக்கு வந்து செல்கிறார்கள். இக் கோயிலின் வடக்கு பிரகாரத்தையொட்டி மணவாள மாமுனிகள் கோயில் உள்ளது. ஆண்டுதோறும் ஐப்பசி மாதம் மூல நட்சத்திரத்தில் 10 நாட்கள் உற்சவம் நடத்தப்படும். இந்த உற்சவத்தின்போது காலையிலும் மாலையிலும் மணவாள மாமுனிகள் வீதி உலா புறப்படும், அந்த உலா தேவநாத சாமி கோயிலைச் சுற்றி வரும்.

மாமுனிகள் வீதி உலா வரும்போது தேவநாத சாமி கோயில் பார்ப்பனர்கள் சன்னதி கதவுகளை இழுத்து மூடி உள்ளே தாழ்ப்பாள் போட்டு விடுகின்றனர். மணவாள மாமுனிகள் சாமியும் அந்த சாமியோடு வருபவர்களும் தேவநாத சாமியைப் பார்க்கக் கூடாதாம். பார்த்தால் தீட்டாம்! இப்படி ஒரு தீண்டாமை பல ஆண்டுகளாக நிலவுகிறது. மாமுனிகள் தரப்பினர் எவ்வளவோ முயன்றும் கதவு மூடப்படுவதைத் தடுக்க முடியவில்லை.

தீண்டத்தகாதவர்கள் என்று கூறி கதவைச் சாத்துவது மட்டுமல்ல, மாமுனிகள் வீதி உலா வந்த மாட வீதிகளில் சாணியை கரைத்து ஊற்றி தீட்டைத் துடைத்து விடுவதும் நடக்கிறது. தினமும் தேவநாதசாமி கோயில் கதவு திறந்தால் உச்சிக் காலம் முடிந்த பிறகுதான் சாத்தப்படும். ஆனால், உற்சவ காலத்தில் மட்டும் காலை 9 மணிக்கே மூடி விடுவார்களாம். மாமுனிகள் சாமி உலா கடந்து சென்ற பிறகுதான் மீண்டும் திறக்கப்படுமாம்.

அக்டோபர் 29, மணவாள மாமுனிகள் கோயிலில் உற்சவம் தொடங்கியது. வழக்கம் போல் காலை மணவாள மாமுனிகள் சாமி வீதி உலா வரும்போது தேவநாதசாமி கோயில் கதவை சாத்தி தாழ்ப்பாள் போட்டு விட்டனர். அப்போது தேவநாதசாமி கோயில் பார்ப்பன அர்ச்சகர்களுக்கும், மணவாள மாமுனிகள் சாம கோயில் பார்ப்பன அர்ச்சகர்களுக்கும் இடையே வாய்த் தகராறு ஏற்பட்டது. அவர்களுக்குள்ளே உள்ள வடகலை, தென்கலை பிரச்சினையால் ஆண்டாண்டு தோறும் இந்த பிரச்சினை தொடருகிறது என்று பல ஆண்டுகளாக இதை கவனித்து வருவோர் கூறுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியை படம் பிடித்த தொலைக் காட்சி மற்றும் பத்திரிகைகளின் புகைப்படக் காரர்களை தேவநாதசாமி கோயில் பார்ப்பனர்கள் மிரட்டி படம் எடுக்கக் கூடாது என தடுக்க முயன்றனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த சம்பவம் குறித்து மாமுனிகள் தரப்பினர், "ஏற்கனவே மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் இந்த பிரச்சினை கைகலப்பாக மாறிவிடுமோ என்ற அச்சத்தில் இருக்கிறோம்" என்று கூறுகின்றனர்.

இந்தக் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தும் அதிகாரிகள் இதில் தலையிடாமல் ஒதுங்கிக் கொண்டு வேடிக்கைப் பார்க்கிறது.

# பெரியாருக்கு முன்பு, 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் நடந்த நாத்திக இயக்கம்

19 ஆம் நூற்றாண்டில் பெரியாருக்கு முன்பு தமிழ் மாகாணத்தில் நாத்திகர் இயக்கம் ஒன்று 'இந்து சுயாக்கியானிகள் சங்கம்' என்ற பெயரில் செயல்பட்டுள்ளது. இந்த அமைப்பு 'தத்துவ விவேசினி' என்ற தமிழ் இதழையும், 'தி திங்கர்' என்ற ஆங்கில இதழையும் நடத்தியுள்ளனர். இந்நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை பேராசிரியர் வீ. அரசு பதிப்பித்துள்ளார்.

'நியு செஞ்சுரி புக் ஹவுஸ்' இத் தொகுதிகளை வெளியிட்டுள்ளது. இது குறித்து ஆய்வரங்கம், சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த் துறை ஆய்வரங்கில் அக்.28, 29, 30 தேதிகளில் நடை பெற்றது. பல்வேறு வரலாற்று ஆய்வாளர்கள் பங்கேற்று நூலின் உள்ளடக்கங்களை பல்வேறு தலைப்புகளில் ஆய்வு செய்தனர். 'சென்னை லவுகிக சங்கமும்-பெரியாரும்' என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி 29 ஆம் தேதியன்றும், 'தத்துவ விவேசினியில் பெண்கள் பற்றிய பார்வை' என்ற தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 30 ஆம் தேதியன்றும் உரையாற்றினர்.

இத்தொகுப்புகள் குறித்து பேராசிரியர் வீ.அரசு அளித்த பேட்டியிலிருந்து சில கருத்துகள்:

இந்து சுயக்கியானிகள் சங்கம் (Hindu Free Thought Union) என்னும் அமைப்பு 1878-1888 காலங்களில் தமிழ்ச் சூழலில் செயல்பட்டது. 'இந்து' எனும் சொல் இந்தியர்களைக் குறிக்கும். இந்து மதத்தைக் குறிக்காது. சுயக்கியானிகள் என்பது சுயசிந்தனையாளர்கள். ஐரோப்பிய நாடுகளில் செயல்பட்ட சுயசிந்தனையாளர்கள் அமைப்புகளின் தாக்கத்தால் இவ்வமைப்பு சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு பின்னர் 1886 இல் சென்னை லவுகிக சங்கம் (Madras Secular Society) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தத்துவ விவேசினி மற்றும் The Thinker இதழ்கள் வழி நாம் பெறும் வரலாற்றுத் தகவல் இது. தத்துவ விவேசினி இதழ் பற்றிய தகவல்கள் மிக மேலோட்டமாகச் சிலரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், சென்னை லவுகிக சங்கத்தின் இதழ்கள், 'தத்துவ விவேசினி', 'தி திங்கர்' ஆகியவை என்பதை முதன்மைப்படுத்தி முதன் முதலாக இந்த ஆறு தொகுதிகளின் மூலம் பதிவு செய்கிறோம். இந்தத் தகவல் தமிழ்ச் சமூக வரலாற்றில் இதுவரை அறியப்படாதது. மேலும் இவ்வமைப்பு நாத்திகக் கருத்துச் சார்பில் செயல்பட்டது என்பது மிக முக்கியம்.

தமிழ்ச் சூழலில் மட்டும்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலனிய காலத்தில் நாத்திக இயக்கம் செயல்பட்டுள்ளது. வங்காளம் போன்ற பகுதிகளில் சமய சீர்திருத்தம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், சமய மறுப்பு வேறு எங்கும் பேசப்படவில்லை. தமிழ்ச் சூழலில் செயல்பட்ட சென்னை லவுகிக சங்கம், அனைத்து மதங்களையும் மறுத்தது. மத வழிப்பட்ட கடவுள் கோட்பாட்டை மறுத்தது. பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் நடைபெறாத மிகவும் முற்போக்கான செயல்பாடு தமிழ்ச் சூழலில் நடைபெற்றது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

லவுகிக சங்கத்தில் செயல்பட்ட உறுப்பினர்கள் இரண்டு வகையாகச் செயல்பட்டார்கள். நேரடியாகத் தங்களது பெயரை வெளிப்படுத்திக் கொண்டு எழுதியவர்கள், பெயர்களை வெளிப்படுத்தாமல், முன்னெழுத்துக்களை மட்டும் போட்டுக் கொண்டும் புனைப் பெயர்களிலும் எழுதியவர்கள் இன்னொரு பிரிவினர். முதல் பிரிவினரை ஆங்கிலத்தில் ஆக்டிவ் மெம்பர் என்றும், அடுத்தப் பிரிவை பாசிவ் மெம்பர்ஷிப் என்றும் அழைத்தனர். 'கிரிஷ்ணகிரி உண்மை விரும்பி' எனும் புனைப் பெயரில் மிக அதிகமாக ஒருவர் எழுதியுள்ளார். இவர்களைக் குறித்த அடையாளங்களைக் கண்டறிவது கடினம். ம.மாசிலாமணி, பு.முனுசாமி நாயகர், அ. முத்துசாமி முனிவர், தி.சி. நாரயண சாமிப்பிள்ளை, திரிசிராபுரம் புத்தூர் வையாபுரியப்பிள்ளை எனச் சில பெயர்களில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. மிகுதியான கட்டுரைகளுக்குப் பெயர் இல்லை.

இவர்களில் இரண்டு முக்கியமான ஆளுமைகளை அறிய முடிகிறது. ஒருவர் மாசிலாமணி, மற்றொருவர் இலட்சுமி நரசு. இவர் பின்னர் மிகச் சிறந்த பௌத்த அறிஞராக அறியப்பட்டு, அம்பேத்கரால் பெரிதும் மதிக்கப்பட்ட திரு.பி.எல். நரசு எனும் இலட்சுமிநரசு ஆவார். சென்னை லவுகிகச் சங்கத்தின் கிளை அமைப்பான இந்து மால்தூசியன் சங்கத்தின் செயலாளராகச் செயல்பட்டுள்ளார். இவ்வமைப்பின் பிறிதொரு கிளை அமைப்பான சிறு பத்திரிகா பிரகடந சங்கம் மூலம் சிறுவெளியிடுகள், புத்தகங்கள் கொண்டு வரப்பட்டன. இவ்வமைப்பின் முதல் வெளியீடாக 1885 இல் 'வருணபேதச் சுருக்கம்' எனும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் இலண்டனில் உள்ள பிரித்தானிய நூலகத்திலிருந்து எனக்குக் கிடைத்தது. இந்நூலின் சிறிது விரிவுபடுத்தப்பட்ட வடிவம் 1990 இல் 'வருணபேத விளக்கம்' எனும் பெயரில் வெளி வந்துள்ளது. 1926இல் கோலார், சித்தார்த்த புத்தக சாலை மூலம் மேற்குறித்த 1900 வருட நூல் மறு அச்சு செய்யப்பட்டுள்ளது. இந்நூலை முதல் தொகுதியில் இணைத்துள்ளேன். மநு தர்மத்தை மறுத்து; சாதி மறுத்து எழுதப்பட்டது இந்நூல்.

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலத்தில் வெளியான கிறித்துவ மறுப்பு நூல்களை வரவழைத்து விற்பனை செய்துள்ளனர்.

சென்னை லவுகிக சங்கத்தின் முதல் வெளியீடான 'வருண பேதச் சுருக்கம்' (1885) என்னும் 'வருண பேத விளக்கம்' நூலானது சாதியத்திற்கு எதிரானது. மநுதருமம் என்பது எவ்விதம் பார்ப்பனியமாகச் செயல்படுகிறது மற்றும் எவ்வகையில் வருண பேதங்களை நியாயப்படுத்து கிறது என்ற விவரங்கள் இந்நூலில் பேசப்படு கின்றன.

'தத்துவ விவேசினி' மற்றும் 'தி திங்கர்' இதழ்களில் சாதியத்திற்கு எதிரான பல கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதழ்களில் எழுதியோர், தங்கள் பெயர்களுடன் சாதி அடையாளங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்விதம் பயன்படுத்துவதைக் கண்டித்த 'தத்துவ விவேசினி' இதழில் ஒரு கட்டுரை வந்துள்ளது. நாத்திகம் பேசுபவர்கள் சாதி மறுப்பாளர்களாகவும் இருப்பது அசியம் என்னும் பொருளில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. மத மறுப்பை எந்த அளவிற்குப் பிரச்சாரம் செய்தார்களோ அந்த அளவிற்கு சாதி மறுப்பு குறித்தும் எழுதியுள்ளனர். மனிதத் தன்மைக்கு எதிரானது சாதி என்ற பொருளில் அமைந்த கட்டுரை தத்துவ விவேசினியில் உள்ளது. இவர்கள் வெளியிட்ட நூலை, தமிழ் பௌத்த மரபைச் சார்ந்தவர்கள் மறு அச்சு செய்து பரப்பியுள்ளதைத் தமிழகச் சாதி ஒழிப்பு மரபிற்குச் சென்னை லவுகிகச் சங்கத்தின் பங்களிப்பாகக் கருதலாம்.

சென்னை லவுகிகச் சங்கம் நடத்திய 'தி திங்கர்' எனும் ஆங்கில ஏடு, அவர்கள் 1879களில் நடத்திய 'The Philosophic enquirer' இன் தொடர்ச்சியாக உள்ளது. 1879 முதல் வெளிவரும் இவ்வமைப்பின் 'தத்துவ விசாரிணி' இதழின் தொடர்ச்சியாகத் 'தத்துவ விவேசினி' வருவதோடு மேற்குறித்த செய்தியை இணைத்துப் பார்க்கலாம். தமிழ்ப் பத்திரிகையில் வெளிவரும் செய்தி வேறாகவும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவரும் செய்தி வேறாகவும் இருக்கிறது. மேலை நாடுகளிலிருந்து இவர்களுக்கு வரும் ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து பல செய்திகளை மீண்டும் 'தி திங்கர்' இல் வெளியிட்டனர். தமிழ்ப் பத்திரிகையில் சைவத்தையும் பிரம்ம ஞானசபையையும் மறுத்து அதிகமாக எழுதினர். ஆங்கிலப் பத்திரிகையில் கிறித்துவ மறுப்பு வெளிப்பட்டது.

'தி திங்கர்' இதழ்கள் மிகவும் சிதிலமடைந்து உள்ளன. இப்பத்திரிகைகளின் ஆங்கில மொழி நடை கடினமாக இருக்கிறது. கொஞ்சம் சங்கடமாக இருந்தது.

தத்துவ விவேசினி இதழின் மொழி நடை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் நடைமுறையில் இருந்த மணிப் பிரவாள மொழி நடை சுமார் 125 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்.

மிகவும் சிதிலமடைந்த நிலையில் இருந்த

(4 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...

- காமன்வெல்த் மாநட்டில் பிரதமர் பங்கேற்பதா இல்லையா என்பது இன்னும் முடிவாகவில்லை.
  **– ப. சிதம்பரம்**

  ஆமாம்! விமானத்துக்கு 'டிக்கட்' உறுதியானால் தான் போவார்!

- தீபாவளியில் ராக்கெட் பட்டாசு விட்டவர்களால் மட்டும் 157 தீ விபத்துகள் நடந்துள்ளன.
  **– தினமலர் செய்தி**

  அதற்காக பட்டாசு வெடித்தவர்கள் மீது வெடி பொருள் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டம் எதையும் காவல்துறை பயன்படுத்திட வேண்டாம்!

- பூமாதேவியின் பிரார்த்தனையை ஏற்று கண்ணபிரானால் தொடங்கி வைக்கப்பட்ட புனித நாள், தீபாவளி.
  **– 'தினமணி'யில் காஞ்சி ஜெயேந்திரன்**

  அதுமட்டுமா? வரதராஜப் பெருமாளை 'மோட்சத்துக்கு' அனுப்பி ஸ்ரீ ஜெயேந்திரர் சிறைவாசஸ்தலத்தில் அவதரித்த புனித நாளும் இதே தீபாவளித் திருநாள் தான்!

- டில்லியில் அட்டகாசம் செய்யும் குரங்குகளைப் பிடிக்க ஆட்கள் தேவை.
  **– மாநகராட்சி பத்திரிகை விளம்பரம்**

  ஸ்ரீராமன் சேனையை இப்படியெல்லாம் அவமதிக்கலாமா? இராமபிரான் வரமாட்டான் என்ற துணிச்சல்; தானே?

- உலகத்திலேயே குழந்தைத் திருமணங்கள் அதிகம் நடக்கும் நாடான இந்தியா, அய்.நா.வில் கொண்டு வரப்பட்ட குழந்தைத் திருமண ஒழிப்புப் பிரகடனத்தில் கையெழுத்திட மறுத்து விட்டது.
  **– செய்தி**

  இது, வேத காலத்திலிருந்து நாங்க கட்டிக் காக்கும் பெருமைங்க. நேற்று வந்த அய்.நா.க்காரனுக்காக தூக்கி வீசிட முடியுமா?

- நாமக்கல் அருகே பவுத்திரம் கிராமத்தில் கோயில் திருவிழாவில் பக்தர்களை பூசாரியால் சாட்டையில் அடித்து 'பேயை' விரட்டுகிறார்கள். காவல்துறை இதை சட்டப்படி தடுக்க முடியும்.
  **– 'இந்து'வில் மனநல மருத்துவர்**

  அதெல்லாம் தடுக்க மாட்டாங்க சார்... சாட்டையடியில உடம்பு 'புண்' ஆனால் குற்றமில்லை. ஆனால், இந்துக்கள் மனம் புண்பட்டுவிடக் கூடாது பாருங்க!

- சாமியார் கூறியபடி உன்னாவ் கோட்டையில் தங்கம் இருப்பதற்கான தடயங்கள் இல்லை; தோண்டுவது நிறுத்தப்பட்டது.
  **– தொல்பொருள் துறை அறிவிப்பு**

  அதெப்படி இல்லாமல் போகும்? எவனோ திருடியிருக்குறான்; அடுத்து சி.பி.அய். கிட்ட சொல்லி அந்த திருடுனவனைத் தேடும் வேலையைத் தொடங்குங்க...

- முதல் பிரதமராக வல்லபாய் பட்டேல்தான் ஆகியிருக்க வேண்டும். **– மோடி**

  அதோடு நிறுத்துங்க... 'பட்டேல் என் கனவில் வந்து சொன்னார்னு' நீங்களும் ஒரு கதையை ஆரம்பிச்சுடாதீங்க...

- கல்வீச்சில் காயமடைந்த கேரள காங்கிரஸ் முதல்வர் உம்மன்சண்டியை முன்னாள் முதல்வர் அச்சுதானந்தன் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். **– செய்தி**

  கேரளாவில் முன்னாள் முதல்வர்களாக இருப்பது தான் பாதுகாப்பு போலும்!

- ம.பி. மாநிலத்தில் சட்டசபைத் தேர்தல் வருவதால், குளங்களில் மலர்ந்துள்ள தாமரைகளை (அது பா.ஜ.க. சின்னம் என்பதால்) திரையிட்டு மறைக்க வேண்டும் என்று தேர்தல் அதிகாரியிடம் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.**– செய்தி**

  ஓட்டுப் போட வரும் வாக்காளர்கள் இரண்டு கைகளையும் (அது காங்கிரஸ் சின்னம் என்பதால்) கட்டுப் போட்டு மறைத்துக் கொள்ள வேண்டும் என்று பா.ஜ.க. திருப்பி கோரிக்கை வைக்கலாமே!

DATE OF PUBLICATION 06.11.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிக்கை

# மத்திய அரசை எதிர்ப்பதே முதன்மை இலக்கு

தமிழக அரசை எதிர்த்து போராடுவது இந்தச் சுழலில் பிரச்சனையின் நோக்கத்தை திசை திருப்பிவிடும் என்ற எச்சரிக்கை உணர்வோடு, தமிழக அரசின் சட்டமன்ற தீர்மானத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு எதிராகவே திராவிடர் விடுதலைக் கழகம் குரல்கொடுக்கும் என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விடுத்துள்ள அறிக்கை:

மனித உரிமை மீறல், போர்க் குற்றம், இனப்படுகொலைகள் புரிந்த இலங்கை அரசு நடத்தும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்ற கோரிக்கையே தமிழகத்தின் ஒரே குரலாக ஒலித்து வருகிறது; தமிழக சட்டமன்றத்தில் முதலமைச்சர் கொண்டு வந்த தீர்மானத்தை அனைத்துக் கட்சியினரும் ஆதரித்துள்ளனர்; தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியும்கூட இதே கருத்தையே முன்வைத்து வருகிறது.

இந்தச் சூழலில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தமிழகத்தின் உணர்வுகளை மதிக்காமல் காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதாக வெளியிட்டுள்ள அறிவிப்பு வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவதுபோல் அமைந்து விட்டது; இதனால் மயிலாப்பூர், மந்தைவெளி பகுதிகளில் உள்ள அஞ்சலகங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக திராவிடர் விடுதலைக் கழக இளைஞர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள்மீது தமிழகக் காவல்துறை ஓராண்டு காலம் சிறையில் அடைக்கக்கூடிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டிருக்கிறது.

சேலம் வருமான வரித் துறை அலுவலக வளாகத்தில் சாக்குத் துணியை கிரசினில் நனைத்து வீசியதாக திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்; சம்பவம் நடந்த அன்று சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் துறை நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றிக் கொண்டிருந்த திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் வழக்கில் சேர்க்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பெரியார் கொள்கைகளுக்காக – பெரியார் வழியில் செயல்படும் திராவிடர் விடுதலைக் கழகம் வன்முறைப் போராட்ட முறைகளை ஏற்காத அமைப்பாகும். எனவே போராட்டத்தின் நோக்கம் உடன்பாடு என்றாலும் போராட்ட முறை நமக்கு உடன்பாடானது அல்ல என்பதை தெளிவுப்படுத்த விரும்புகிறோம்; உணர்ச்சி உந்துதலால் தவறான வழிமுறையைப் பின்பற்றியவர்கள் மீது கழகம் நடவடிக்கை எடுக்கும்.

ஈழத்தில் ஒரு இனப்படுகொலை நடந்துள்ளது. போருக்குப் பிறகும் நிலம், வாழ்க்கை, குடும்பங்களை தொலைத்துவிட்டு இராணுவத்தின்பிடியில் – தமிழர்கள் உரிமையற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்; போரில் உதவிய இந்தியா போருக்குப் பிறகும் இலங்கையைத் தட்டிக் கேட்கவில்லை.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மகன் பாலசந்திரன் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட காட்சியை சேனல்4 வெளியிட்டபோது தமிழர்கள் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாயினர்; இப்போது இசைப்பிரியா என்ற ஈழத்துப் இளம் பெண் ஊடகவியலாளர் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்ட காட்சியை சேனல்4 வெளியிட்டுள்ளது நெஞ்சை உலுக்குகிறது; இவ்வளவு கொடுமைகளையும் செய்த ஒரு அரசை நட்பு நாடு என்று இந்திய அரசு உறவாடுவதையும் உதவுவதையும் சகித்துக் கொள்ள முடியாத இளைஞர்கள்தான் இத்தகைய போராட்ட வழிமுறைகளை கையில் எடுத்து வருகிறார்கள் என்பதையும் ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்ற அடக்குமுறை சட்டங்களை தமிழக அரசு பயன்படுத்துவதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்காக தமிழக அரசை எதிர்த்து போராடுவது இந்தச் சுழலில் பிரச்சனையின் நோக்கத்தை திசை திருப்பிவிடும் என்ற எச்சரிக்கை உணர்வோடு, தமிழக அரசின் சட்டமன்ற தீர்மானத்தை வலியுறுத்தி மத்திய அரசுக்கு எதிராகவே திராவிடர் விடுதலைக் கழகம் குரல்கொடுக்கும்.

---

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*இவ்விதழ்களை ஒரு கட்டத்தில் நோட்டில் எழுதினோம். சுமார் இருபது பெரிய அளவிலான லெட்ஜர் நோட்டில் எழுதினோம். பின்னர் கணிப்பொறியில் ஸ்கேன் செய்து, பெரிதுபடுத்தி, படிகளை எடுத்து அதனை தட்டச்சு செய்யப் பயன்படுத்தினோம். கட்டுரைகளில் தொடர்ச்சி அறுபட்டுப் போன பகுதிகளுக்குப் புள்ளி இட்டுப் பதிப்பித்துள்ளோம். ஓலைச்சுவடிகளைப் பதிப்பிப்பதுபோன்றது இவ்வேலை. இறுதிக் கட்டத்தில் நியுசெஞ்சுரி நிறுவன ஊழியர்கள் பெரிதும் உதவினர். சில ஆண்டுகளுக்கு முன் ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் மூலம் சுமார் 1000 பக்கங்கள் தட்டச்சு செய்தோம்.*

*எனக்குக் கிடைத்த எனது மாணவ நண்பர்களின் உழைப்பு இல்லாவிட்டால், இதனை முடித்திருக்க முடியாது. கணிப்பொறி வழி சில பணிகளை எளிதாகச் செய்ய முடிகிறது. பயமுறுத்தும் வேலை என்பதால் சுமார் 12 ஆண்டுகள் விட்டுவிட்டு வேலை செய்ய வேண்டி வந்தது. பல்வேறு வசதிகளையும் பெற்றுள்ள நிறுவனங்கள் இவ்வகைப் பணிகளைச் செய்ய வேண்டும். தமிழில் உள்ள வரலாற்று ஆவணங்களாக அமையும் கடந்த 150 ஆண்டுகளில் வெளிவந்துள்ள இதழ்களை, ஓலைச் சுவடிகளைப் போல பதிப்பிப்பது அவசியம்.*

*சென்னை லவுகிக சங்கம் என்னும் அமைப்பு குறித்த அனைத்து விவரங்கள், விளம்பரங்கள், அறிக்கைகள் உட்பட அனைத்தையும் முதல் தொகுதியில் இணைத்துள்ளோம். இவ்வியக்கத்தின் முக்கிய அறிவிப்புகள் மூலம், அதன் செயல்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வியக்கம் நடைமுறைப்படுத்திய கடவுள் கோட்பாடு குறித்த பொருண்மைகள் இரண்டாம் தொகுதியாக அமைகிறது. சாதி, சமயம் மற்றும் பெண்கள் தொடர்பான இவ்வியக்கம் முன்னெடுத்த கருத்து நிலைகள் சார்ந்த கட்டுரைகள் மூன்றாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. சென்னை லவுகிக சங்கம் பிரச்சாரப்படுத்திய அறிவியல் செய்திகள், மூடநம்பிக்கைக்கு எதிரான செயல்பாடுகள் மற்றும் காலனிய அரசை இவர்கள் எதிர்கொண்ட முறைமைகள் நான்காம் தொகுதியாக அமைகிறது. ஆங்கிலத்தில் உள்ள ஐந்து மற்றும் ஆறாம் தொகுதிகள் 'தி திங்கர்' இதழில் வெளிவந்த கடவுள் மறுப்பு. அறிவியல், வறுமை மற்றும் பெண்கள் குறித்த செய்திகளின் தொகுப்பாக அமைகிறது. சுமார் 3500 பக்கங்களைக் கொண்ட இத்தொகுதிகளை வெளியிட்ட நியு செஞ்சுரி புத்தக நிறுவனத்திற்கு எங்களது நன்றி என்றும் உரியது, என்று கூறினார் பேராசிரியர் அரசு.*

### கழகத் தலைவர் கொளத்தூர் மணியை வைகோ சந்தித்தார்

*சேலம் மத்திய சிறையில் தோழர் கொளத்தூர் மணியை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, நவம்பர் 4 ஆம் தேதி திங்கள்கிழமை சந்தித்துப் பேசினார்.*

### 'அவாள்'களே கூறுகிறார்கள்!

*கோயில்களில் கூட்டம் அதிகரித்து விட்டது. முக்கிய நாள்களில் சிறப்பு வழிபாடுகள் நடக்கின்றன. மேலோட்டமாக பார்க்கும்போது பக்தி நெறி செழித்திருப்பதுபோலத் தெரிகிறது. இது பொய்த் தோற்றம். இந்நாளில் இருக்கும் பக்தி வழுக்கல் நிலத்தில் வடித்த மாளிகை.* – **'தினமலர்–பக்திமலர்' அக்.24**

*பெரியார் இயக்கம் தோற்று விட்டது என்போருக்கு 'அவாள்'களே தரும் ஒப்புதல் வாக்குமூலம்!*

### மத்திய அமைச்சர் உருவபடம் எரிப்பு

*காமன்வெல்த் மாநாட்டில் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொள்வார் என மத்திய அரசு அறிவித்துள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை முன்பு திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் அகில இந்திய தலித் முன்னேற்றக் கழகத்தினர் சல்மான் குர்ஷித் உருவப் படத்தை எரித்தனர். திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் காளிதாசு, தலித் மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜே.ஆர்.எஸ். மற்றும் புரட்சி லெனின், ஆதவன், செந்தமிழ்ச் செல்வன், மணிகண்டன் உள்பட 20 பேர் சல்மான் குர்ஷித் மற்றும் மத்திய அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.*


### குரங்கிலிருந்து மீண்டும் மனிதன் தோன்ற முடியுமா?

*பூமியில் மனிதர்கள் ஒருக்கால் அழிந்துவிட்டால், மீண்டும் மனிதக் குரங்குகளில் இருந்து மனிதன் தோன்ற வாய்ப்பு இருக்கிறதா? இந்த இடத்தில் ஒருவிஷயத்தை முதலில் நாம் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும். பரவலாக நம்பப்படுவது, கூறப்படுவதைப்போல நாம் மனிதக் குரங்கில் இருந்து பரிணாம வளர்ச்சி அடையவில்லை. நமக்கும், மனிதக் குரங்குகளுக்கும் பொதுவான ஒரு மூதாதை 1 கோடி ஆண்டுக்கு முன்னால் இருந்திருக்கக் கூடும் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. அந்த பொது மூதாதையை* PAN PRIOR *என்று அழைக்கிறார்கள். அல்லது மனிதன், குரங்கு பொது மூதாதை என்கிறார்கள். அறிவியல் ரீதியில் நாம் இன்னமும் மனிதர்களாக வகைப்படுத்தப்படவில்லை. நாம் மனிதக் குரங்குகள்தான். அதாவது, சமூகத்தில் வாழும் மனிதக் குரங்குகள்.*

*அதே நேரம் நமது பொது மூதாதை இப்போது வாழ்கிறது என்று வைத்துக் கொண்டாலும்கூட, பரிணாம வளர்ச்சி அல்லது படிநிலை வளர்ச்சி என்பது தொடர்பற்ற மரபணுக் கலப்பு* (Gene mutation), *சுற்றுச் சூழல் நெருக்கடிகளால்* (Environmental Pressures) *உருவாகும் இயற்கைத் தேர்வு* (Natural selection) *ஆகியவற்றின் அடிப்படையிலேயே நிகழ முடியும். இவற்றை வைத்துப் பார்த்தால், மீண்டும் மனித இனம் தான் கடந்து வந்த பாதையைத் தொடுவதற்கு மிகக் குறைந்தபட்ச வாய்ப்புகள்கூட இல்லை.* – **'இந்து' தமிழ் நாளேட்டிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 7th November 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN




புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | நவம்பர் 14, 2013 | புரட்சி 12 | முழக்கம் 44 | விலை: ரூ.3.00


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது மீண்டும் தேசிய பாதுகாப்புச் சட்டம்

சேலம் வருமான வரித் துறை அலுவலக வளாகத்தில் சாக்குகளில் மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரோலை நனைத்து கொளுத்தி வீசிய குற்றச்சாட்டில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் கிருஷ்ணன், அருண்குமார், அம்பிகாபதி ஆகியோர் கைது செய்யப் பட்டனர்.

இதே வழக்கில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணியையும் காவல்துறை இணைத்து கைது செய்தது. 4 பேர் மீதும் தேசிய பாதுகாப்பு சட்டம் பாய்ந்துள்ளது. அனைவரும் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்துடன் அனைவர் மீதும் இந்திய தண்டனைச் சட்டம் 124(ஏ), 120(பி), 307, 285 உடன் தமிழ்நாடு பொதுச் சொத்து பாதிப்புச் சட்டப் பிரிவு 3(1), 1908 ஆம்ஆண்டின் எரிபொருளால் ஆபத்துகளை உண்டாக்கக்கூடிய சட்டத்தின் பிரிவு 3, ஆகியவற்றின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, அருண் ஆகியோர் அயராது செயலாற்றுகின்றனர்.

சென்னையில் மயிலை, மந்தைவெளி அஞ்சலகம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு தோழர்களும் புழல் சிறையில் அடைக்கப் பட்டனர்.

**விடுதலை இராசேந்திரன் சந்தித்தார்**

சேலம் மத்திய சிறையில் அடைக்கப் பட்டுள்ள கழகத் தலைவர் கொளத்தூர் மணியை பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், நவம்பர் 7 ஆம் தேதி அன்று சிறையில் சந்தித்தார். மண்டல செயலாளர் மேட்டூர் சக்தி, மாவட்ட தலைவர் கருப்பூர் சக்திவேலு உடனிருந்தனர்.

‘குடிஅரசு’ தொகுப்புகளையும், பெரியாரியல் தொடர்பான நூல்களையும் கழகத் தலைவர் சிறையில் படிக்கிறார். மாவட்டந்தோறும் ஒரு நாள் பெரியாரியல் பயிற்சி முகாம்களை நடத்துமாறு கேட்டுக் கொண்டார்.

கழகம் தொடங்கியுள்ள மக்களை சந்திக்கும் திட்டத்தில் தோழர்கள் முனைப்போடு பங்காற்றி, நிதி திரட்டிடவும், இயக்க உறுப்பினர்களை அதிகரித்திடவும் செயலாற்றுமாறு கேட்டுக் கொண்டார். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிடும் மலர் குறித்தும் கேட்டறிந்தார். சிறைபட்டுள்ள கழகத் தோழர்களின் விடுதலையை வலியுறுத்தும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை கழக சார்பில் நடத்தத் தேவையில்லை. காமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்கும் கோரிக்கையையே முன்னிறுத்தலாம் என்று கூறினார். மாலை 5 மணிக்கு வழக்கறிஞர்கள் சந்திப்புக்கு அனுமதி வழங்கப்படுகிறது. வழக்கறிஞர்கள் சந்தித்துப் பேசி வருகிறார்கள்.

நவம்பர் 8 ஆம் தேதி வெள்ளிக் கிழமையன்று விடுதலை சிறுத்தைகள் செய்தி தொடர்பாளர் வன்னியரசு, மாவட்டக் கழக விடுதலை சிறுத்தை பொறுப்பாளர்களுடன் சிறையில் சந்திக்கச் சென்றபோது அது சந்திப்பு நாள் அல்ல என்று கூறி அனுமதிக்க மறுக்கப்பட்டது. அதைக் கண்டித்து, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சிறைவாசல் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.11.2013

### சேலம் கழகச் செயலவைக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள்

# வன்முறை போராட்ட வடிவம் உடன்பாடானதல்ல!

***திராவிடர் விடுதலைக் கழகச் செயலவை 5.10.2013 அன்று சேலத்தில் செயலவைத் தலைவர் க. துரைசாமி தலைமையிலும், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையிலும் கூடியது. கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப் பட்டன:***

- பெரியார் கொள்கைகளை பெரியார் வழியில் மக்களிடம் கொண்டு செல்வதையே இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது திராவிடர் விடுதலைக் கழகம். அந்த அடிப்படையில் ஜாதி, தீண்டாமை ஒழிப்பு, சமூக நீதி, பகுத்தறிவு, பெண்ணுரிமை, ஈழ விடுதலை, தமிழின உரிமைகளுக்காக தொடர்ந்து இயக்கங்களையும் பரப்புரைகளையும் நடத்தி வருகிறது.

  திராவிடர் விடுதலைக் கழகத்தின் அணுகுமுறைக்கு எதிரான, வன்முறை சார்ந்த போராட்ட வடிவங்கள் கழகத்திற்கு உடன்பாடானது அல்ல. இத்தகைய, கழகத்தின் உடன்பாடு இல்லாத, போராட்ட முறைகளை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள சென்னை, சேலத்தைச் சார்ந்த 7 தோழர்களும் கழகத்தில் இருந்து இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள். இவர்கள் மீது கழக சார்பில் விசாரணை செய்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

- சேலம் வழக்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியையும் இணைத்து, பெரியார் கொள்கைகளை முன்னெடுப்பதில் முனைப்புடன் செயல்படும் இயக்கத்தின் மீது களங்கம் கற்பிக்கும் நோக்கத்தோடு கைது செய்துள்ள காவல்துறைக்கு தலைமைக் குழு வன்மையாக கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

- திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் எதிர்காலத்தில் கழகத் தலைமையின் முன் அனுமதி பெற்றே எந்தப் போராட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்று தலைமைக் குழு அறிவுறுத்துகிறது.

- இலங்கையில் நடக்கும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது, இனப் படுகொலை நடத்திய நாட்டுக்கு, ஜனநாயக முகமூடி போட்டு மறைக்க முயலும் சதியே ஆகும். தமிழக சட்டமன்றத்தில் ஒருமித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் உணர்வுகளை மத்திய அரசு மதித்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

- காவல் துறையின் அடக்குமுறைகளைசந்தித்தாலும் கூட மத்திய அரசு காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கக் கூடாது என்ற முதன்மையான கோரிக்கையிலிருந்து பிரச்சினையை திசை திருப்பி, தமிழக அரசின் மீதான எதிர்ப்பாக மாறிவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வோடு தொடர்ந்து காமன்வெல்த் புறக்கணிப்பிற்கே முன்னுரிமை தந்து குரல் கொடுக்க தலைமைக்குழு முடிவு செய்கிறது.

## கொளத்தூர் மணியை விடுவிக்க வேண்டும்: கட்சித் தலைவர்கள் வலியுறுத்தல்

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள கழகத் தலைவர் கொளத்தூர் மணியை விடுதலை செய்ய வேண்டும் என முக்கியக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பா.ம.க. நிறுவனர் இராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன, மனிதநேய மக்கள் கட்சித்தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர் வெளியிட்ட அறிக்கை:

**ராமதாஸ் :** “நாட்டின் பாதுகாப்புக்காக அரிதிலும் அரிதாகப் பயன்படுத்த வேண்டிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொளத்தூர் மணியை கைது செய்திருப்பது கண்டனத்துக்குரியது. மரக்காணம் கலவரத்தைத் தொடர்ந்து பா.ம.க. தொண்டர்கள் 134 பேர் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். பா.ம.க. எம்.எல்.ஏ. காடுவெட்டி குரு 4 முறை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அப்போது மற்ற அரசியல் கட்சிகள் இதனைக் கண்டித்திருந்தால் இப்போது கொளத்தூர் மணி மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்காது. தமிழக அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக அனைத்து அரசியல் கட்சிகளும் குரல் கொடுக்க வேண்டும். உடனடியாக கொளத்தூர் மணியை விடுதலை செய்ய வேண்டும்.”

**திருமாவளவன் :** “தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஒரு இயக்கத்தின் தொண்டர்கள் செய்யும் செயல்களுக்கு அவ்வியக்கத்தின் தலைவரை கைது செய்ய வேண்டும் என்றால் அனைத்து அரசியல் தலைவர்களையும் சிறைப்படுத்த வேண்டியிருக்கும். எனவே கொளத்தூர் மணி மீதான வழக்கை திரும்பப் பெற்று அவரை விடுதலை செய்ய வேண்டும்.”

**ஜவாஹிருல்லா :** “வன்முறையைத் தூண்டியதாக கொளத்தூர் மணி கைது செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஜனநாயகப் போராட்டங்களில் நம்பிக்கைக் கொண்ட அவர், வன்முறைகளுக்கு துணைபோகக் கூடியவர் அல்ல. எனவே, அ வர் மீதான வழக்கை வாபஸ் பெற்று உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.”

## பல்லாயிரம் தமிழர்கள் திரண்டனர்; ‘முள்ளிவாய்க்கால் முற்றம்’ திறக்கப்பட்டது

ஈழத்தின் இறுதிப் போரில் உயிர்துறந்த பல்லாயிரம் மக்களின் நினைவாக தஞ்சையில் முள்ளிவாய்க்கால் முற்றம் இரண்டரை லட்சம் ஏக்கர் பரப்பளவில் எழுப்பப்பட்டுள்ளது. நெஞ்சை உலுக்கும் படுகொலை காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. ஈழத் தமிழர்களுக்காக உயிர்த் தியாகம் செய்த முத்துக்குமார் உள்ளிட்ட 20 தமிழினப் போராளிகளின் சிலைகளும், தமிழ் வளர்த்த அறிஞர், பேராசிரியர் படங்களும் இடம் பெற்றுள்ளன. காவல்துறை கெடுபிடிகளால் நீதிமன்ற அனுமதியோடு திட்டமிட்டதற்கு இரண்டு நாள் முன்னதாக முற்றம் திறக்கப்பட்டது. 7, 8, 9 தேதிகளில் தமிழக முன்னணித் தலைவர்கள், கலைத் துறையைச் சார்ந்தவர்கள், உணர்வாளர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடந்தன. உலகத் தமிழர் பேரவை ஒழுங்கு செய்த இந்நிகழ்வுக்கு தலைமை தாங்கிய பழ. நெடுமாறன், இந்த முற்றத்தை தமிழர்களுக்கு சமர்ப்பித்தார். பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் விழாவில் திரண்டிருந்தனர். கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்ட சிற்பங்களும், ஓவியங்களும் உணர்ச்சியூட்டுவதாய் அமைந்துள்ளது என பலரும் தெரிவித்தனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறைப்படுத்தப்பட்டதால் நிகழ்வில் பங்கேற்று உரையாற்ற இயலவில்லை

(பெரியார் புறக்கணிப்பு – 3 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## அவமதிக்கிறது, இந்திய ஆட்சி!

ஒன்றரை லட்சம் தமிழர்கள் இனப்படுகொலைகளுக்கு உள்ளான வரலாற்றின் கொடூரத்துக்கு நீதி கேட்டால், 'ஓட்டு அரசியல்' என்று சிறுமைப்படுத்துகின்றன பார்ப்பன ஏடுகள். இனப்படுகொலை நடந்த நாட்டில் காமன்வெல்த் மாநாடு கூட்டப்படுகிறதே என்பது குறித்து இவர்களுக்கு கவலை இல்லை. மன்மோகன் சிங் பங்கெடுக்காமல் தவிர்த்து விட்டாரே என்பதற்காக, அனலில் இட்ட புழுவாகத் துடிக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளில் 11 முறை காமன்வெல்த் மாநாடு கூடியிருக்கிறது. இதில் 5 முறை இந்தியாவின் பிரதமர் பங்கேற்றது இல்லை; இது 6 ஆவது முறை. அவ்வளவு தான்!

மன்மோகன் சிங் பங்கேற்காமல் போனதால் இலங்கையுடனான உறவு துண்டிக்கப்பட்டுவிட்டதுபோலவும், அதற்குப் பிறகு எப்படி, தமிழர் உரிமைக்கும், மீனவர் பாதுகாப்புக்கும் இலங்கையிடம் பேச முடியும் என்றும் 'இந்து'வின் ஆங்கில மற்றும் தமிழ் ஏடுகள் குடம் குடமாக கண்ணீர் வடிக்கின்றன. 2009 இல் இனப்படுகொலை உச்சக்கட்டத்தில் நடந்த நேரத்தில்கூட ராஜபக்சே தரப்பு நியாயங்களை எழுதிக் கொண்டிருந்த ஏடுதான் 'இந்து' என்பதை தமிழர்கள் மறந்துவிடவில்லை.

இப்போதும்கூட மன்மோகன் சிங் இலங்கையின் மனித உரிமை மீறலுக்கோ, போர்க் குற்றத்துக்கோ எதிராக, காமன்வெல்த் மாநாட்டுப் பயணத்தைத் தவிர்க்கவில்லை. இயலாமையின் காரணமாக வரமுடியவில்லை என்று தான் ராஜபக்சேவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார், எங்கே ராஜபக்சே மனம் புண்பட்டுவிடுமோ என்று!

'பல்வேறு காரணங்களால்' பங்கேற்க இயலவில்லை' என்று தொலைபேசி வழியாக ராஜபக்சேவை சமாதானப்படுத்த முயன்றிருக்கிறார். பல்வேறு காரணங்கள் எவை என்பதை அவர் கூறவில்லை. இதைவிட கொடுமை வெளியுறவு அதிகாரி ஒருவர் வெளியிட்டுள்ள கருத்துதான். இலங்கையுடன் இந்தியா நட்புறவு கொண்டிருந்ததால் தான் 300 தமிழக மீனவர்களை இலங்கை சிறையிலிருந்து விடுவிக்க முடிந்ததாம். இது என்ன வாதம்? இலங்கை கப்பல்படை தமிழக மீனவர்களைத் தாக்குவதையும் சிறை பிடிப்பதையும் கண்டிக்க வேண்டிய இந்திய வெளி விவகாரத் துறை, இலங்கையின் கருணையாலும் நட்புறவாலும்தான் மீட்க முடிந்தது என்று வாய்கூசாமல் கூறுவது அவமானம் அல்லவா? தமிழகத்தின் எதிர்ப்புகளால் இலங்கை அரசு மீனவர் பிரச்சினைப் பற்றிப் பேசினால் அனுதாபத்தோடு காது கொடுக்கவே மறுக்கிறதாம். பல்வேறு மட்டங்களில் இந்தியா, இலங்கை அரசிடம் மிகவும் தாழ்ந்து நிற்க வேண்டியிருக்கிறதாம். இப்படி எல்லாம் வெளிநாட்டுத் துறை அதிகாரிகள் வெளிப்படையாகவே பேட்டி தருகிறார்கள். இந்தியாவுக்கென்று ஒரு 'இறையாண்மை' இருப்பதை ஒதுக்கிவிட்டு இலங்கையிடம் மன்றாடும் அணுகுமுறை - நாட்டுக்கு பெருமை சேர்க்குமா? 'தமிழின வெறுப்பு' தானே இப்படி எல்லாம் அவர்களை பேச வைக்கிறது?

மன்மோகன் சிங், மாநாட்டுக்குப் போயிருந்தால் யாழ்ப்பாணம் போய் தமிழர்களின் பிரச்சினைகளை நேரில் அறிந்திருக்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்குமே என்று எழுதுகிறது 'இந்து'. இப்போதும்கூட வெளி விவகாரத் துறை அமைச்சர் தமிழர் பகுதிக்குப் போகலாமே! யார் தடுத்தார்கள்? வடக்கு மாகாண முதல்வர் விடுத்த அழைப்பு அப்படியே இருக்கிறதே! ஆஸ்திரேலியாவைச் சார்ந்த 'கிரீன்ஸ் பார்ட்டி' கட்சியின் செனட் உறுப்பினரும் நியுசிலாந்து நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரில் கண்டு கொழும்பில் பத்திரிகையாளர்களை சந்திக்க நவம்பர் 10 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை வந்தபோது, இலங்கை அரசு பத்திரிகையாளர்கள் சந்திப்புக்கு தடை போட்டு விட்டது. குடியுரிமைத் துறை அதிகாரிகள் அவர்களை தடுப்புக் காவலில் வைத்துள்ளார்கள். காமன்வெல்த் மாநாடு தொடங்கிய நாளிலேயே இலங்கையில் நடந்து முடிந்திருக்கும் இந்தக் கூத்து, அந்நாட்டின் 'மனித உரிமை', 'கருத்துரிமை'யின் கோர முகத்தைக் கிழித்துக் காட்டியிருக்கிறது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவரான பிரிட்டிஷ் இளவரசியே இந்த மாநாட்டுக்கு வரவில்லை. கனடா நாட்டின் பிரதமரோ இலங்கையின் மனித உரிமை மீறலை வெளிப்படையாகக் கண்டித்து தனது புறக்கணிப்பை முதுகெலும்போடு பதிவு செய்திருக்கிறார். ஆனால், வர இயலாமல் போய்விட்டதை வருத்தத்துடன் கடிதம் வழியாகவும் தொலைபேசி வழியாகவும் ராஜபக்சேவிடம் கருணை மனுப் போட்டுவிட்டு ஒதுங்கியிருக்கிறார், இந்தியப் பிரதமர்!

தமிழர்களின் உணர்வுக்கு மிகப் பெரும் அவமானம்!

# தர்மபுரியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கு: மேட்டூரில் கழகம் ஆர்ப்பாட்டம்



7.11.13 அன்று மாலை 4.30 மணிக்கு மேட்டூர் பேருந்து நிலையம் எதிரில் சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தருமபுரி நத்தம், அண்ணா நகர், கொண்டம்பட்டி ஆகிய பகுதிகள் ஆதிக்க சாதி வெறியர்களின் தாக்குதலுக்குள்ளாகி ஓராண்டாகியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத அரசைக் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தமிழக அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் கண்டன உரையாற்றினார். தருமபுரி கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியை வழங்கு என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் அரசு கலைக் கல்லூரி மாணவர் அமைப்பு ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டனர். மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை நன்றியுரை கூறினார்.

## நவம்பர் 23 இல் 'உயில்வலி' ஆவணப்படம் திரையீடு: கிருஷ்ணய்யர் விருதுகள் வழங்கும் விழா

'உயிர்வலி சக்கியடிக்கும் சத்தம்' ஆவணப்படம் திரையிடலும் நீதியரசர் வி.ஆர்.கிருஷ்ணய்யர் விருதுகள் வழங்கும் நிகழ்வும் நவம்பர் 23 சனி மாலை 3 மணியளவில் சென்னை சர்.பிட்டி தியாகராயர் அரங்கில் நிகழ்கிறது. மரணதண்டனை எதிர்ப்புக் கூட்டமைப்பு நடத்தும் இந்நிகழ்வில் இரா. நல்லக்கண்ணு, பழ. நெடுமாறன், வைகோ, ஜி.இராமகிருட்டிணன், செந்தமிழன் சீமான், புலவர் புலமைப்பித்தன், தொல். திருமாவளவன், கோ.கா.மணி, கோவை. இராமகிருட்டிணன், வேல் முருகன், மருத்துவர் கிருட்டிணசாமி, தனியரசு, ஹாஜா கனி, தெகலான் பாக்வி, பெ. மணியரசன், தியாகு, ஹென்றி டிபேன் ஆகியோர் உரையாற்றுகிறார்கள். விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்குகிறார். கிருஷ்ணய்யர் மற்றும் செங்கொடி விருதுகள் வழங்கப்படுகின்றன. 'உயிர்வலி' ஆவணப்படம் திரையிடப்படுகிறது.

## கொளத்தூர் மணி கைதைக் கண்டித்து சேலத்தில் தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்–கைது

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கைதைக் கண்டித்து தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டு, சேலம் டவுன் காவல் நிலையத்தில் அனுமதி கேட்கப்பட்டிருந்தது. காவல்துறை அனுமதி மறுத்ததால் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

11.11.2013 திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள நாட்டாண்மை கட்டிடம் எதிரில் அந்த அமைப்பின் மாநில தலைவர் பூமொழி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 53 தோழர்களும் கைது செய்யப்பட்டு மாலையில் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 143, 341, 188 ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## விண்வெளித் துறையின் மூடநம்பிக்கை

### *இஸ்ரோ தலைவர் இராதாகிருஷ்ணன் – ஒவ்வொரு செயற்கைக்கோள் ஏவும்போதும் திருப்பதி ஏழுமலையான் ஆசி பெறுகிறார்*

இஸ்ரோ அமைப்பு மொத்தத்தில் எவ்வித மூடநம்பிக்கையிலும் ஈடுபடுவதில்லை என்று இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் ஐ.ஏ.என்.எஸ். செய்தியாளர்களிடம் கூறியுள்ளனர். அவர்கள் மூடநம்பிக்கையை முறியடித்து செவ்வாய் அன்று ஏவுகணையை ஏவியதாக மார்தட்டிக் கொள்கிறார்கள். ஆனால், இதுவரை செவ்வாய்கிழமையன்று ஒரு ஏவுகணைகூட ஏவப்பட்டதில்லை. அது ஒரு ராசியில்லா நாள் என்பதுதான் காரணமாகும். செவ்வாய் ராசியில்லை என்றால் அப்பெயர் கொண்ட கிரகம் குறித்து ஏன் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. இஸ்ரோ நிறுவனத்தின் மூத்த அதிகாரியொருவர் செவ்வாய் எனக்கு ராசியான நாள் என்று கூறியுள்ளார். அப்படியென்றால் அவரின் விருப்பப்படி தான் செவ்வாய் கிரகத்துக்கு செவ்வாய் அன்று விண்கலத்தை அனுப்புவது பொருத்தமாக இருக்கும் என்று அவர்கள் கருதியிருக்கக் கூடும். விண்வெளிக்கலம் 12 அய் ஏவிய பிறகு, 13 அய் தவிர்த்துவிட்டு, 14 அய் ஏவியது ஏன்? 13 ராசியில்லாத எண் என்பதாலா என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. அதிகாரிகள் மவுனம் சாதிக்கிறார்கள்.

# மண்ணை மணந்த மணாளர் பெரியார்

*தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இடம் பெற்றுள்ள தமிழக தலைவர்களின் படங்களில் பெரியார் இடம் பெறவில்லை. இதற்கு விளக்கம் கேட்ட தோழர்களிடம், 'தமிழகத் தலைவர்கள் – தமிழுக்காக உழைத்தவர்கள் – தமிழ் எழுத்தாளர்கள் – தமிழ்ப் பேச்சாளர்கள்' என்ற நான்கு வகைப்படுத்தலிலும் பெரியார் எதிலும் இடம் பெறவில்லை என்று அமைப்பாளர்கள் சார்பில் கூறப்பட்டதாம்.*

*பெரியாருக்கு சான்றிதழ்களை வழங்கும் உரிமைகளை இவர்களே கையில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விழாவில் பேசிய மருத்துவர் இனியன் இளங்கோ, தனது உரையிலேயே பெரியார் புறக்கணிப்பை சுட்டிக் காட்டியிருக்கிறார். பெரியார் பேச்சு – எழுத்து பற்றி 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' வ.ரா. என்று அழைக்கப்படும் ராகவ அய்யங்கார், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி, திரு.வி.க. ஆகியோரின் கருத்துகளை இங்கு பதிவு செய்கிறோம்.*

### வ.ரா. எழுதுகிறார்

*"தேர் இல்லை, திருவிழா இல்லை, தெய்வம் இல்லை என்றார் நாயக்கர்; சுவாமியைக் குப்புறப் போட்டு வேட்டி துவைக்கலாம் என்கிறார். இவரைக் காட்டிலும் பழுத்த நாஸ்திகன் வேறு எவருமே இருக்க முடியாது. 'பாதகன்' என்று சிலர் உறுமுகிறார்கள். வீட்டைக் கட்டி வைக்கோலைத் திணிப்பதைக் காட்டிலும், வீடு கட்டாமலே வைக்கோலைப் போராய்ப் போடலாம் என்ற சிக்கன யோசனை சொல்வது தவறா? அழுகி அழுகிப் போய் புழு நெளியும் உடலுடன் இருப்பதைக் காட்டிலும், உயிர் விடுவது உத்தமம் என்று அபிப்பிராயம் கொடுத்தால், "சாகச் சொல்கிறான் பாவி" என்று திட்டுவதா?*

*கண்டவர்க்கெல்லாம் குனிந்து சலாம் செய்து மண்ணோடு மண்ணாய் ஒட்டிக்கொண்டு மார்பால் ஊர்ந்து செல்ல வேண்டாம் என்று சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டினால், "பாபி, நமஸ்காரத்தைக் கண்டிக்கிறான்" என்று அபத்தம் பேசுவதா? மனசாட்சிக்கும், தொண்டுக்கும் பக்தரான நாயக்கரை, நாஸ்திகன் என்று அழைக்கும் அன்பர்கள், நாஸ்திகம் யாது என்றே தெரிந்து கொள்ளவில்லை என்றே சொல்லுவேன்...*

*அநீதியை எதிர்க்கத் திறமையும், தைரியமும் அற்ற ஏழைகளாய்ச் சொரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை, அடி தெரியும்படி கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம், நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும். அப்பா! நாயக்கரின் அழகுப் பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணிஅணியாய் அலங்காரஞ் செய்யும் உவமானங்களை, உபகதைகளை, அவரது கொச்சை வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பைப் பார்க்கவும், கேட்கவும், வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பதுபோல் வந்து மொய்ப்பார்கள்.*

***அவர் இயற்கையின் புதல்வர்! மண்ணை மணந்த மணாளர்! மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு, நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் என்பதில் சந்தேகமில்லை...*** *செய்ய வேண்டும் என்று தோன்றியதைத் தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதைப் போல, தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப் படுவதில்லை. தமிழ்நாட்டின் வருங்காலப் பெருமைக்கு, நாயக்கர் அவர்கள் முன்னோடும் பிள்ளை; தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு, அவர் கண்ணில் அரைகுறையாகப் பட்டிருக்கலாம். (எவர் கண்ணிலேனும் அது முழுமையாகப் பட்டிருக்கிறதாக யார் உறுதியாகச் சொல்ல முடியும்?)*

*ஆனால், மலைகளையும், மரங்களையும், வேரொடு பிடுங்கி யுத்தம் செய்த மாருதியைப் போல, அவர் தமிழ்நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு போர் புரியும் வகையைக் கண்டு, நாம் வியப்படையாமல் இருக்க முடியாது.*

**(1933இல் 'காந்தி' இதழில் எழுதியது)**

### கல்கி கிருட்டிணமூர்த்தி

***பிரபல பார்ப்பன எழுத்தாளர் கல்கி கிருட்டிணமூர்த்தி பெரியாரைப் பற்றி எழுதுகிறார்.***

*சாதாரணமாக இராமசாமியாருடைய பிரசங்கங்கள் மூன்று மணி நேரத்திற்குக் குறைவது கிடையாது. இந்த அம்சத்தில் தென்னாட்டு ராமசாமியார் வடநாட்டு பண்டித மாளவியாவை ஒத்தவராவார். ஆனால், இருவருக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு.*

*பண்டிதரின் பிரசங்கத்தை, அரை மணி நேரத்துக்குமேல் என்னால் உட்கார்ந்து கேட்க முடியாது. 'பஞ்சாப் படுகொலை'யைப் பற்றிய தீர்மானத்தின் மேல் பேச வேண்டுமென்றால், பண்டிதர், சுராஜ்உத்டௌலா ஆட்சியில் ஆரம்பிப்பார். 1885 ஆம் வருஷத்தில் காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்ட காலத்திற்கு வருமுன், பொழுது விடிந்துவிடும்.*

*ஆனால், இராமசாமியார் இவ்வாறு பழங்கதை தொடங்குவதில்லை. எவ்வளவு தான் நீட்டினாலும், அவருடைய பேச்சில் அலுப்புத் தோன்றுவதே கிடையாது. அவ்வளவு ஏன்?*

***தமிழ்நாட்டில், இராமசாமியாரின் பிரசங்கம் ஒன்றை மட்டுந்தான், என்னால் மூன்று மணி நேரம் உட்கார்ந்து கேட்க முடியுமென்று தயங்காமல் கூறுவேன்.*** *அதிக நீளம் என்னும் ஒரு குறைபாடு இல்லாவிட்டால், ஈரோடு ஸ்ரீமான் ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்குத் தமிழ்நாட்டுப் பிரசங்கிகளுக் குள்ளே முதன்மை ஸ்தானம் தயங்காமல் அளித்து விடுவேன். அவர் உலகானுபவம் என்னும் கலாசாலையில், முற்றுணர்ந்த பேராசிரியர் என்பதில் சந்தேகமில்லை. எங்கிருந்துதான் அவருக்கு அந்தப் பழமொழிகளும், உபமானங் களும், கதைகளும், கற்பனைகளும் கிடைக் கின்றனவோ நானறியேன்!*

*தாம் உபயோகிக்கும் சொற்கள் எல்லாம் செந்தமிழ்ப் பதங்கள்தாமாவென்று, நாயக்கர் சிந்திப்பதில்லை. எழுவாய், பயனிலைகள், ஒருமை - பன்மைகள், வேற்றுமையுருபுகள் முதலியவைகளைப் பற்றியும் அவர் கவலைப்படு வதில்லை. ஆனால், தாம் சொல்ல விரும்பும் விஷயங்களை மக்களின் மனத்தைக் கவரும் முறையில் சொல்லும் வித்தையை அவர் நன்கறிவார். அவர் கூறும் உதாரணங்களின் சிறப்பையோ, சொல்ல வேண்டுவதில்லை.*

*இராமசாமியாரின் பிரசங்கம் பாமர ஜனங்களுக்கே உரியது என்று ஒரு சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். பாமர ஜனங்களை வசப் படுத்தும் ஆற்றல், தமிழ்நாட்டில் வேறெவரையும் விட, அவருக்கு அதிகம் உண்டு என்பதில் சந்தேக மில்லை. ஆனால், இதிலிருந்து அவருடைய பிரசங்கம், படித்தவர்களுக்கு ரசிக்காது என்று முடிவு செய்தல் பெருந்தவறாகும். என்னைப் போன்ற அரைகுறைப் படிப்புக்காரர்களேயன்றி, முழுதும் படித்துத் தேர்ந்த பி.ஏ., எம்.ஏ., பட்டதாரிகளுங்கூட அவருடைய பிரசங்கத்தைக் கேட்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அவருடைய விவாதத் திறமை அபாரமானது. "இவர் மட்டும் வக்கீலாகி வந்திருந்தால், நாமெல்லாம் ஓடு எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்" - என்று ஒரு பிரபல வக்கீல், மற்றொரு வக்கீல் நண்பரிடம் கூறியதை நான் ஒரு சமயம் கேட்டேன்.*

**(1931இல் 'ஆனந்தவிகடன்' இதழில் எழுதியது)**

### தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்

***தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெரியாரைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்.***

*வைக்கம் வீரர்களுக்கு பல திற அணி களுண்டு. அவைகளுள் ஒன்று வைராக்கியம். மயிலை மந்தைவெளியிலே (8.3.1924) நாயக்கரால் நிகழ்த்தப் பெற்ற சொற்பொழிவிலே இராஜ நித்னை இயங்கியதென்று அவர் கைது செய்யப்பட்டார். வழக்கு நடந்தது. நாயக்கர் இராயப்பேட்டையிலே தங்கினார். ஓர் இரவு 'குகானந்த நிலைய'த்திலே, நாயக்கர் ஒரு திண்ணையில் உறங்கினார்; யான் மற்றொரு திண்ணையில் உறங்கினேன். பதினொரு மணிக்கு மழை தொடங்கியது. நண்பரை எழுப்பினேன். அவர் கண் விழிக்கவில்லை. மழை பெருகியது. மீண்டும் நேயரை எழுப்பினேன். கண்கள் மூடிய படியே இருந்தன. பெரியாரைப் பலமுறை எழுப்பி எழுப்பிப் பார்த்தேன். பயன் விளையவில்லை. நாலு மணிக்கு மழை நின்றது. ஆறு மணிக்கு வைக்கம் வீரர் எழுந்தார். எனக்குச் சொல்லொண்ணாச் சிரிப்பு. 'மழை பெய்தது தெரியுமா?' என்று நண்பரைக் கேட்டேன். 'மழையா?' என்றார். நாயக்கரைத் தீண்டியுள்ள பாம்பு, 124-ஏ வழக்கு நடப்புக் காலம்! அந்நிலையில், நண்பருக்குக் கவலையற்ற உறக்கம்! என் எண்ணம், நாயக்கர் மனத்தின் மீது சென்றது. 'அவர் மனம் பொன்னா? சஞ்சல முடையதா?' என்ற ஆராய்ச்சியில் இறங்கினேன்.*

*1942 ஆம் ஆண்டு இராமசாமிப் பெரியார் ஜெனரல் ஆஸ்பத்திரியில் படுக்கையில் கிடந்தபோது, அவரைக் காணச் சர்க்கரைச் செட்டியாரும், சண்முகானந்த சாமியும், ஜானகிராம் பிள்ளையும், யானும் சென்றோம். யான் அவர் கட்டிலிலே நெருங்கி அமர்ந்தேன். நாயக்கர் என் கையைப் பற்றிக் கறினார். என் கைக்குட்டை நனைந்தது. இருவருங் கருத்து வேற்றுமையுடையவர்; போரிட்டவர். பெரியார் கண்கள் ஏன் முத்துக்களை உகுத்தன? அக்காட்சி கண்டவர், "இங்கே பலர் வருகிறார்; போகிறார். எவரைக் கண்டும் பெரியார் அழுதாரில்லை. இவரைக் கண்டதும் அவருக்கு அழுகை ஏன் பெருகியது?" என்று ஒருவரோடொருவர் பேசியது, என் காதுக்கு எட்டியது. அழுகைக்குக் காரணம் என்ன?*

***அஞ்சாமையும், உண்மையும் உள்ள இடத்தில் கருத்து வேற்றுமைக்கு இடந்தரல் என்ற பெருங் குணம் அமைந்திருக்கும். கருத்து வேற்றுமைக்கு இடமுள்ள நாடுதான், நாகரிக நாடாக இருக்க முடியும்.*** *கருத்து வேற்றுமைக்கு இடங்கொடாத ஆட்சி கொடுங்கோல் ஆட்சியாகத்தான், மிருக ஆட்சியாகத் தான் காட்சி யளிக்கும். நாங்கள் பல்லாண்டுகளாகக் கருத்து வேறுபாடுடையவராக இருந்தும், சென்னை வந்தால், அவர் இராயப்பேட்டையிலுள்ள என் வீட்டிற்கு வருவார். நானும் அவர் அழைக்கும் போதெல்லாம் ஈரோடு செல்வன்.*

*இராமசாமி பெரியார், ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ, தென்னாட்டிலும், வட நாட்டிலும், பிற நாடுகளிலும் மண்டிக் கிடக்கிறது! காரணம் என்ன? தோழர் ஈ.வெ.ரா.வின் உண்மையும், வாய்மையும், மெய்மையுஞ் செறிந்த அறத் தொண்டாகும்.*

*ஈ.வெ.ரா.விடம் ஒருவித இயற்கைக்கூறு அமைந் துள்ளது. அதனின்றும் அவரது தொண்டு கனிந்தது. அஃதென்னை? அஃது அகவுணர்வு வளர்ந்து செல்லும் பேறு. இப்பேறு பலர்க்கு வாய்ப்பதில்லை; மிகச் சிலர்க்கே வாய்க்கும்.*

*உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ.வெ.ரா. வின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடைமலை.*

***பெரியார் கல்லூரி காணாதவர்; பாடசாலைப் படிப்புக் குறைவு. ஆனால், எவருக்கும் எளிதில் கிடைக்காத இயற்கையறிவை ஏராளமாகப் பெற்றிருக் கிறார்.***

***இவர் இயற்கைப் பெரியார். நான் என் வாழ்நாளில், இதுகாறும் செய்த ஆராய்ச்சிகளுள் அகப்படாத பல பெரியார் கருத்துக்களும், அரிய யோசனைகளும் இப்பெரியாரின் இயற்கையறிவில் உதித்திடக் காண்கிறேன்.***

*".... தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" இது பெரியாருக்குத்தான் பொருந்தும்.* ✦

'புரட்சிப் பெரியார் முழக்கம்'
**இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 9941613535

DATE OF PUBLICATION 13.11.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# ஒவ்வொருவரிடம் ரூ.10 நன்கொடை

# திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் ‘மக்கள் சந்திப்பு இயக்கம்’

திராவிடர் விடுதலைக் கழகம், ‘மக்கள் சந்திப்பு இயக்கம்’ என்ற இயக்கத்தைத் தொடங்குகிறது. இத்திட்டத்தின்படி உழைக்கும் மக்களை, மாணவர்களை, பெண்களை, ஆதரவாளர்களை, தோழர்களை சந்தித்து ஒவ்வொருவரிடமும் ரூ.10 நன்கொடைகளைத் திரட்ட வேண்டும். இப்படி 10 ரூபாய் நிதி திரட்டும் இயக்கத்துக்கு ஒவ்வொரு தோழருக்கும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.10,000/-. நிதி திரட்டுவதோடு ஒவ்வொரு தோழரும் 5 புதிய தோழர்களை இயக்கத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

‘நண்பர்களை தோழர்களாக்குவோம்; தோழர்களை இயக்கமாக்குவோம்’ என்ற குறிக்கோளோடு 10 ரூபாய் நிதி சேர்ப்புத் திட்டம் தொடங்குகிறது. இதற்கான நன்கொடை சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

கழகத்தின் பொருளாளர் இரத்தினசாமி அவர்களுடன் தோழர்கள் தொடர்புகொண்டு இதற்கான நன்கொடை ரசீதுகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சேலம் சிறையில் உள்ள நமது கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இத் திட்டத்தில் தோழர்கள் முனைப்போடு களமிறங்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்துள்ளார்.

தோழமை அமைப்புகளின் ஆதரவையும் நன்மதிப்பையும் பெற்று வளர்ந்து வருகிறது நமது இயக்கம்!

தன்னலமின்றி நேர்மையாக கொள்கை சமரசமின்றி நிமிர்ந்து நிற்கும் நமது அமைப்பின் வலிமை தான் பெரியார் கொள்கைக்கு வலிமை சேர்ப்பதாகும்.

ஈரோட்டில் மாபெரும் வெற்றி மாநாட்டை நடத்திக் காட்டிய திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்வீரர்களே!

மக்களை சந்திக்கும் திட்டத்தில் விரைந்து களமிறங்கிடுவீர்!

**– விடுதலை இராசேந்திரன்**
**பொதுச் செயலாளர்**

# நிதிகேட்டு வருகிறோம்: ஆதரவுக்கரம் நீட்டுங்கள்

**தமிழர் சமுதாயத்தின் விடிவெள்ளியாம் பெரியார் கொள்கைகளுக்காக கொளத்தூர் மணி தலைமையில் செயல்படும் இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம்.**

திராவிடர் விடுதலைக் கழகம் -

- ஜாதி-தீண்டாமைக்கு எதிராக களமிறங்கிப் போராடுகிறது.
- மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் மதவெறி சக்திகளுக்கு எதிராக குரல் கொடுக்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் தனியார் தொழில்துறைகளில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுக்காக இயக்கங்களை நடத்துகிறது.
- அரசு நிறுவனங்கள் மதச்சார்பற்றதாய் செயல்பட போராடுகிறது.
- இராஜபக்சேயின் இனப்படுகொலை போர்க் குற்றங்களுக்கு எதிராய் நீதி கேட்டு நிற்கிறது.
- மரணதண்டனைக்கு எதிராகவும் மக்கள் விரோத கூடங்குளம் அணுமின் திட்டங்களுக்கு எதிராகவும், பறிக்கப்படும் தமிழர் வாழ்வுரிமைகளுக்காகவும் தோழமை அமைப்புகளோடு களமிறங்கி செயலாற்றுகிறது.
- பெண்ணடிமைக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிராக மக்களைச் சந்தித்து கருத்துகளை பரப்புகிறது.
- மனித உரிமைகளுக்கும் அடக்குமுறை சட்டங்களுக்கும் எதிராக குரல் கொடுக்கிறது.
- ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டை 12 ஆண்டுகளாக நடத்து வதோடு, பெரியாரிய சிந்தனைகளை நூல்களாகவும் வெளியிட்டு பரப்பி வருகிறது.

தொய்வில்லா களப்பணியில் தொடர்ச்சியாக நிற்கும் திராவிடர் விடுதலைக் கழகம், அதன் களப்பணிகளுக்காக தோழமை சக்திகளை - ஆதரவாளர்களை - தமிழர் நலன் பேணுவோரை - நிதி கேட்டு நாடி வருகிறது! ஆதரவுக்கரம் நீட்டுங்கள்!

களப்பணிக்கு தோள் கொடுங்கள்!

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

## தி.க. பொருளாளர் கோ. சாமிதுரை முடிவெய்தினார்

திராவிடர் கழகப் பொருளாளர் மானமிகு கோ. சாமிதுரை (81), 9.11.2013 அன்று சென்னையில் முடிவெய்தினார். தி.மு.க. தலைவர் கலைஞர் மலர்வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். அவரது உடல், சொந்த ஊரான கல்லக்குறிச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி நிகழ்வுகள் நடந்தன. தி.க. தலைவர் கி.வீரமணி இறுதி மரியாதை செலுத்தினார். வழக்கறிஞரான கோ. சாமிதுரை, வழக்கறிஞர் தொழிலைவிட்டு, முழு நேரம் திராவிடர் கழகத் தலைமைக் கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியவர்.

அவரது குடும்பத்தாருக்கும் தோழர்களுக்கும் திராவிடர் விடுதலைக் கழகம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

# வினாக்கள்... விடைகள்...

✦ கட்சியின் சின்னத்தை – அரசின் சின்னமாகப் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. **– மினி பேருந்தில் இரட்டை இலை இடம் பெற்றிருப்பதை எதிர்த்து மு.க. ஸ்டாலின் வழக்கு!**

நியாயமான கோரிக்கை! அப்படியே, கட்சியின் கொடியைப் போலவே தேசியக் கொடியையும் உருவாக்கியிருக்கும் காங்கிரஸ் கட்சியையும் இந்த வழக்கில் சேர்க்கலாமே!

✦ சி.பி.அய். அமைப்புக்கு சட்ட அங்கீகாரம் கிடையாது என்று கவுகாத்தி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை. **– செய்தி**

நல்லதாப் போச்சு! தடைவிதிக்காதிருந்தால் கவுகாத்தி உயர்நீதிமன்றமே சட்டபூர்வமானது அல்ல என்று சி.பி.அய். வழக்குப் பதிவு செய்திருக்கும்!

✦ காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க இயல வில்லை என்று வருத்தம் தெரிவித்து, ராஜபக்சேவுக்கு மன்மோகன்சிங் சுருக்கமான கடிதம். விளக்கம் எதுவும் எழுதவில்லை. **– செய்தி**

அதுவரை நல்லது. இலங்கை அரசு மீது எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை. நல்லாட்சி நடத்துவதற்கு வாழ்த்துகிறேன் என்று எழுதிவிட்டால் வீண் வம்பு!

✦ இலங்கை இராணுவத்தின் ‘கொலைக் களங் களை’ அம்பலப்படுத்திவரும் சேனல்–4 தொலைக் காட்சி இயக்குனர் கல்லம் மெக்ரடேவுக்கு இந்தியா ‘விசா’ மறுப்பு. **– செய்தி**

அப்படி எல்லாம் எல்லாருக்கும் எளிதாக விசா வழங்க முடியாதுங்க! தமிழ்நாட்டில் ‘முள்ளி வாய்க்கால் முற்ற’த்துக்குள் நுழைய தந்தை பெரியாருக்கே விசா கிடைக்கல்லே, தெரியுமா?

✦ திருச்செந்தூர் கோயிலில் முருகக் கடவுள் ‘சூரனை’ அழித்தொழிக்கும் சூரசம்ஹாரம் நடக்கும்போது மூன்று காவல்துறை அதிகாரிகள் மாற்றப்பட்டதால் ஏற்பாடுகளில் குழப்பம் ஏற்பட்டது. **– ‘தினமலர்’ செய்தி**

காவல்துறை அதிகாரிகளையே சாட்சியாக வைத்துக்கொண்டு அழித்தொழிப்புகள் நடக்க வேண்டாமே என்ற அரசின் நல்லெண்ணம் தான்!

✦ கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை கோயில் அறங்காவலராக நியமிக்க முடியாது என்று தமிழக அரசு புதிய சட்டம் கொண்டு வருகிறது. **– செய்தி**

நல்லது; கடவுள் நம்பிக்கை இருப்பதற்கான சான்றிதழை தாசில்தாரிடம் வாங்கினால் போதுமா அல்லது அரசு உயர் அதிகாரிகளிடம் வாங்க வேண்டுமா?

✦ 142 உலக நாடுகளில் வளம் மிக்க நாடுகளில் நார்வே முதலிடம். இந்தியாவுக்கு 106வது இடம். **–லண்டன் ஆய்வு நிறுவனம் தகவல்**

அதெல்லாம் ஏற்க முடியாதுங்க. எல்லாவற்றிலும் குஜராத்தான் முதலிடம்! புரிஞ்சுக்குங்க...

✦ பாரதிய ஜனதாவின் ஒரே மதம் இந்தியா – இந்திய தேசம் தான். **– கான்பூரில் மோடி பேச்சு**

அதாவது, இந்து மதத்துக்கே இந்தியா என்று பெயர் சூட்டுறீங்க போல! நல்லாவே புரியுது!

✦ தேர்தல் ஆணையத்துக்கு பயந்து இந்து மத சம்பிரதாயங்களைக் கைவிட மாட்டேன் என்று கூறிய ம.பி. பா.ஜ.க. அமைச்சர் விஜய் வர்சியா விடம் விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் தாக்கீது. **– செய்தி**


இதுக்கெல்லாம் பதில் எழுதாதீங்க விஜய்! இந்து சம்பிரதாயப்படியே ஏதாவது ‘பரிகாரம்’ செஞ் சிடுங்க; அதுவே போதும்.

✦ காலக்கெடு முடிந்த பிறகும், 35 மத்திய அமைச்சர்கள் இன்னும் சொத்து விவரங்களை தாக்கல் செய்யவில்லை. **– செய்தி**

இப்படி எல்லாம் அவசரப்படக் கூடாது; சொத்து சேர்ப்பதற்கு இன்னும் பதவிக்காலம் இருக்கும்போது இப்போதே காட்டு என்றால், அது என்னங்க நியாயம்?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 15th November 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | நவம்பர் 21, 2013 | புரட்சி 12 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...

+ மனித உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய அமைப்புகள் எங்கள் நாட்டில் இருக்கின்றன. புகார் தெரிவித்தால் அரசு விசாரிக்கும்.
**– ராஜபக்சே பேட்டி**

அப்படியா? இராணுவத்துக்கே மனித உரிமைப் பிரிவு என்று பெயர் மாற்றம் செய்து விட்டீர்களா? சொல்லவே இல்லை!

+ இலங்கை தமிழர் பகுதியை பார்வயிடச் சென்ற 'சேனல்-4' தொலைக்காட்சிக் குழுவினர் ரயிலை சிங்களர்கள் மறித்து குழுவினரை திருப்பி அனுப்பினர்.
**– செய்தி**

ஓகோ! ராஜபக்சே கூறிய மனித உரிமைக் குழு, இது தானா? இப்பத்தான் விளங்குது!

+ கேரள முதல்வர் உம்மன்சாண்டி – மக்கள் சந்திப்பு திட்டத்தின் வழியாக மாவட்டந் தோறும் சென்று மக்களை சந்தித்து வருகிறார். **–செய்தி**

முதலமைச்சரை மக்கள் நேரிலேயே பார்க்கலாமா? என்ன சொல்றீங்க? நம்பவே முடியவில்லையே; எங்க தமிழ்நாட்டு மக்களும் கேரளாவுக்கு வந்து முதலமைச்சரை நேரிலேயே பார்க்க அனுமதிப்பீங்களா... ப்ளீஸ்.....

+ பாட்னாவில் மோடி கூட்டத்தில் நடந்த தொடர் வெடிகுண்டு வெடிப்பு தொடர்பாக நான்கு இந்து இளைஞர்களை தேசிய புலனாய்வு அமைப்பு கைது செய்துள்ளது. **– செய்தி**

சரி விடுங்க! இஸ்லாம் மதத்திலிருந்து இந்து மதத்துக்கு மாறிய முன்னாள் இஸ்லாமிய பயங்கரவாதிகள் என்று அறிவிச்சுடலாம்!

+ மோடியின் பாட்னா கூட்டத்தில் குண்டு வெடித்த உடனேயே பங்கஜ் என்ற பா.ஜ.க.வைச் சார்ந்தவரை போலீஸ் கைது செய்தது. அவர் தற்போது எங்கே இருக்கிறார் என்பது தெரியவில்லை.
**– பாட்னா இணையதள செய்தி**

அவரை எதுக்கு இப்ப தேடுறீங்க? வழக்கு உச்சநீதி மன்றம் போய் – நீதிமன்றம் ஒரு விசாரணைக் குழு போடும்போது, தேடிக்கலாம், விடுங்க!

+ இந்தி திரைப்படத்துக்கு 'ராம் லீலா' என்று பெயர் சூட்டியுள்ளது இந்துக்களின் மத உணர்வைப் புண்படுத்துகிறது. **– லக்னோவில் எதிர்ப்பு**

திரைப்படத்துக்கு மட்டுமல்ல; இனி மனிதர்களுக்கே எந்த இந்துக் கடவுள் பெயர்களையும் எவரும் சூட்டக் கூடாதுன்னு ஒரு வழக்குப் போட்டு தடை வாங்கிடுங்க. இதே தொல்லையாப் போச்சு...

+ உலகத்திலுள்ள மொத்த கொத்தடிமைகளில் 50 சதவீதம் பேர் இந்தியர்கள். **– ஆய்வில் தகவல்.**

உடனடித் தேவை –கொத்தடிமைகள் (அப்படியே நீடிக்க) பாதுகாப்புச் சட்டம்!

+ சென்னை மாநகராட்சியில் 299 சாலைகள் அமைப்பது உட்பட 844 பணிகள் தொடங்குவதற்காக அமைச்சர் வளர்மதி தலைமையில் பூமாதேவிக்கு பூமி பூஜை போடப்பட்டது. **– செய்தி**

பூஜை போட்ட பூமியில் கற்களைக் கொட்டி தார் ஊற்றி புல்டோசரை ஓடவிடுவது 'தெய்வ நிந்தனை' அல்லவா?

+ நீலகிரி மாவட்டத்தில் பழங்குடியினர் வாழும் தேவாலா, மூச்சுக்குன்னு குடியிருப்புக்கு 65 ஆண்டுகளாக மின் இணைப்பே இல்லை. இலவச தொலைக் காட்சிப் பெட்டி, காட்சிப் பொருளாக இருக்கிறது.
**– செய்தி**

அப்படின்னா, பொழுது சாஞ்சா, தொலைக் காட்சிப் பெட்டியையும் பார்க்க முடியாதுங்களே...


+ இரயில்வேயில் தட்டச்சர் தேர்வுக்கு விண்ணப் பித்தவர்கள் கையோடு தட்டச்சு எந்திரங்களையும் கொண்டுவர ரயில்வே வாரியம் உத்தரவு. **– செய்தி**

தேர்வானவர்கள் தங்களுக்கான மேசை, நாற்காலி களையும் அவர்களேதான் கொண்டுவர வேண்டுமா?

# காவல்துறை வளாகங்களில் வழிபாட்டு தலங்களுக்கு தடை

காவல்துறை வளாகங்களில் – கோயில், மசூதி, சர்ச் போன்ற வழிபாட்டுத் தலங்கள் இருப்பது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

"அரசு அலுவலகங்களில் வழிபாட்டுத் தலங்களை அனுமதிக்கக்கூடாது என்று அனைத்து காவல்துறை பிரிவுக்கும் அறிவுறுத்தப்படுகிறது" என்ற சுற்றறிக்கை 2013 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதி அனைத்து காவல்துறை நிர்வாக அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. காவல்துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட இந்த சுற்றறிக்கையில் இயக்குனர் கே. இராமானுஜம் கையெழுத்திட்டுள்ளனர்.



C.No.114469/Bldgs I(1)/2012

Office of the
Director General of Police,
Chennai 600 004.

Dated: 10.03.2013

CIRCULAR MEMORANDUM

Police – Buildings – Functioning of worships in the campus of the Police buildings – Certain instructions issued – Regarding.

**************

It is brought to notice that the places of worships such as Temple, Church, Mosque etc., are functioning within the campus of Police premises.

2) All Unit Officers are instructed that they should not allow any new places of worship in Govt., premises.

Sd/-K.Ramanujam,
Director General of Police

To
All Unit Officers.

Copy to RI, Chief Office Stores.
Copy to Superintendent, A&R Section, Chief Office.
(3 copies - for important circular book)

for Director General of Police

காவல்துறை வளாகத்தில் இடம் பெற்றுள்ள காவல் நிலையங்களுக்கும் இது பொருந்தும். வழிபாடுகள் எதுவும் நடக்கக்கூடாது என்பது காவல் நிலையங்களில் நடக்கும் ஆயுத பூஜைகளுக்கும் பொருந்தும். ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றம் காவல் நிலையங்களில் பூஜைகள் போடுவதை தடைசெய்து தீர்ப்பளித்துள்ளது. இப்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலும் 7 மாதங்களுக்கு முன்பு காவல்துறை இயக்குனராலேயே சுற்றறிக்கையும் அனுப்பப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் நகல் வெளியிடப்பட்டுள்ளது.

# உங்கள் வரவேற்பு, பாராட்டு எனக்கு வேண்டாம்

'இந்த ஊருக்கு சுமார் 20, 25 வருடங்களுக்கு முன்பு (அதாவது 1922, 23) இரண்டு மூன்று தடவை வந்திருக்கிறேன். அப்போது காங்கிரஸ்காரனாய் வந்தேன். அதன் பிறகு இப்போதுதான் வர வாய்ப்புக் கிடைத்தது. இதுவும் நீங்கள் ஒரு வருஷ காலமாய் எங்களை அடிக்கடி வந்து அழைத்ததன் பயனாக இன்று வர முடிந்தது. நாட்டின் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல், கிராமங்களுக்குத் தெரிவதில்லை. ஒவ்வொரு கிராமத்தையும் அங்குள்ள செல்வாக்குள்ள யாரோ ஒருவர் இருவர் அடக்கி ஆண்டு தங்கள் நலனுக்கு ஏற்ற வண்ணம் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எங்கள் வரவு மிகவும் கஷ்டமாகவும் அதிருப்தியாகவும் வெறுப்பாகவும் இருக்கிறது. இந்த வெறுப்பு நான் ஊர்வலம் வந்தபோது நன்றாய்த் தெரிந்தது. எப்படியெனில் பல சுவர்களில் என்னைப் பற்றி நீங்கள் புகழ்ந்து எழுதி வரவேற்புக் கூறியிருக்கிறீர்கள்.

ஆனால் சில சுவர்களில் 'சாமி இல்லை என்னும் பாவி இராமசாமி ஒழிக' என்று எழுதப்பட்டிருந்ததையும் நான் பார்த்தேன். இதன் காரணம் என்ன? இதை எழுதியவர்கள் சாமியைக் காப்பாற்றுவதற்காக இதை எழுதினார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. பின் ஏன் எழுதினார்கள் என்றால் அவர்களுடைய யோக்கியதையும் அவர்கள் கட்சியின் பித்தலாட்டங்களையும் அதன் பேரால் அவர்கள் நடந்து கொள்ளும் அயோக்கியத்தனங்களையும் நான் உங்களுக்கு எடுத்து விளக்கிக் காட்டிவிடுவேன் என்கின்ற பயமேயாகும். இது நான் போகும் இடங்களில் அநேகமாய் எங்கும் நடைபெறுகிற வேலையாகும். மற்றவர்களைப்பற்றி இப்படி எழுதுவதில்லை என்றாலும் நாங்கள் அதற்கு அஞ்சாமல் கிராமம் கிராமமாய்ச் சுற்றி விஷயங்களை ஒளிக்காமல் விளக்கிக் கொண்டுதான் வருகிறோம்.

எங்கள் இயக்கம் பெரிதும் அயோக்கியர்களையும் பித்தலாட்டங்களையும் வெளியாக்கும் இயக்கமாகும். எங்களுக்கு எதிரிகள் அதிகம். நாங்கள் இந்த வேலையைச் செய்கிறவர்கள் – மிக மிகக் கொஞ்சப் பேர்...

.... எனக்கு உங்கள் வரவேற்புத் தேவையில்லை. என் வீட்டு மாட்டுக் கொட்டகையில் 2000, 3000-க்கு மேற்பட்ட வரவேற்புப் பத்திரங்கள் குவியலாகக் கிடக்கின்றன. உங்கள் பணமோ, ஓட்டோ எனக்குத் தேவையில்லை. எனக்கு இனியும் இரண்டொருவருக்குக் கஞ்சி வார்க்கும்படி பண சவுகரியத்தை எங்கள் பெற்றவர்கள் செய்து வைத்து இருக்கிறார்கள். பதவியோ, எப்பொழுது வேண்டுமானாலும் என்னால் பெற முடியும். ஆகையால் உங்களிடம் நான் எதுவும் எதிர்பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. நீங்கள் சுயமரியாதை உணர்ச்சியுடன் சிந்தித்துப் பாருங்கள்.

நான் நாஸ்தினானாலும் தேசத் துரோகியானாலும் நீங்கள் கவலைப்படாதீர்கள்! நீங்கள் மனிதர்களாக ஆவதற்கும், சமஜாதியில், சம உரிமைக்காரராய் ஆவதற்கும் முயலுங்கள். இதற்கு இன்று திராவிடர் கழகம் ஒன்றுதான் பயன்படுகிறது.

**(தந்தை பெரியார் ஈரோடு அருகில் ஒரு கிராமத்துப் பிரச்சாரத்தில்–25.1.1947)**

**தலையங்கம்**

## இடித்தது சுற்றுச் சுவரை மட்டும் அல்ல!

ஈழப் போரில் சிங்கள இராணுவத்தால் கொன்று குவிக்கப்பட்ட தமிழர்கள், தாயகத்தின் விடுதலைக்காக இராணுவத்தை எதிர்த்துப் போராடி களப்பலியான மாவீரர்கள் நினைவாக தஞ்சையில் கடுமையான உழைப்பினால் கட்டி எழுப்பப்பட்ட முள்ளி வாய்க்கால் முற்றம் – தமிழினத்தின் வரலாற்றுச் சின்னம்! இழிவையும், மடமையையும், மக்கள் பொதுப் புத்தியில் ஏற்றிக் கொண்டிருக்கிற கோயில்கள் அல்ல இவை. இந்த முற்றம், தமிழர்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கையை கனலாக மூட்டி நிற்கிறது.

தமிழ்நாட்டில் இத்தகைய எழுச்சியூட்டும் முற்றங்கள் தான் கோயில்களுக்கு மாற்று என்று நாம் கருதுகிறோம். இந்த முற்றத்தைக் கட்டி எழுப்ப எத்தனையோ தமிழர்கள் தங்களை அர்ப்பணித்து உழைத்திருக்கிறார்கள். தங்கள் ஆற்றல்களை பங்களிப்புகளாக வழங்கியிருக்கிறார்கள். அது செங்கல்லும் சிமெண்டும் கலந்த கட்டிடம் மட்டுமல்ல; உணர்வுகளைச் சுமந்து நிற்கும் பாசறையும்கூட!

அத்தகைய முள்ளிவாய்க்கால் முற்றம் திறக்கப்பட்டு, நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட அடுத்த சில நாட்களிலேயே தமிழக அரசின் நெடுஞ்சாலைத் துறை நெஞ்சில் ஈரமின்றி அதன் சுற்றுச் சுவரையும் அழகு மிளிர உருவாக்கப்பட்டிருந்த நீரூற்றுப் பூங்காவையும் உடைத்து சிதைத்திருப்பது ஆணவத்தின் உச்சமான வெளிப்பாடு. அதிகார பலத்தை மட்டுமே நம்பிக் கொண்டு தமிழக அரசு எடுத்த இந்த நடவடிக்கை வன்மையான கண்டனத்துக்குரியது; வரலாற்றுக் களங்கம்!

அரசின் உரிய அனுமதியோடு தான் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்று உலகத் தமிழர் இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் கூறியிருக்கிறார்.

அரசு நிலத்தின் மீதான ஆக்கிரமிப்பு என்று அரசு கூறுவது உண்மை என்றே வாதத்துக்கு ஏற்றுப் பேசுவோம். அப்படியானால், தடுப்புச் சுவர் எழுப்பும்போதே ஏன் தடுக்கவில்லை? குறைந்தது அதை இடிப்பதற்கு முன் உரிய தாக்கீது அனுப்பி விளக்கம் கேட்க வேண்டிய நடைமுறைகளை ஏன் பின்பற்றவில்லை? இந்தக் கேள்விகளுக்கு தமிழக அரசு பதில் சொல்ல வேண்டும்.

பொது இடங்களையும் நடைபாதைகளையும் ஆக்கிரமித்து போக்குவரத்துக்கு நெருக்கடிகளை உருவாக்கும் எத்தனையோ கோயில்கள் வீதிக்கு வீதி ஆக்கிரமித்துக் கொண்டு விபத்துகளை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றனவே; அவைகளை நோக்கி இந்த இடிப்பு எந்திரங்கள் ஏன் திரும்பவில்லை என்று கேட்கிறோம்.

காவல்துறையின் இடிப்புகளைத் தொடர்ந்து மக்களே கொதித்தெழுந்து கம்பி வேலி அமைத்து அரணமைத்து தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியிருப்பதைப் புரிந்து கொள்ளாமல், அவர்கள் மீது தடியடி நடத்தியிருப்பதையும் பழ. நெடுமாறன் போன்ற மூத்த தலைவர்களையும் தமிழின உணர்வாளர்களையும் கிஞ்சித்தும் மனிதநேயம்கூட இல்லாமல் கைது செய்து சிறையிலடைத்திருப்பதையும் – இனத்தின் எதிரிகளால் கூட நியாயப்படுத்த முடியாது. தமிழின உணர்வை காலில் போட்டு நசுக்கும் நடவடிக்கைகள் ஆகும்! அவர்கள் சிறையில் அடைக்கப் பட்டுள்ள ஒவ்வொரு நாளும் இந்த அரசு அவமதிப்பை சந்திக்கும் நாட்களே ஆகும்.

தமிழக முதல்வர் ஜெயலிதா, ஈழத் தமிழர் பிரச்சினைக்காகவும் தமிழக உரிமைகளுக்காகவும் மேற்கொண்டுவரும் ஒவ்வொரு நடவடிக்கையை யும் உறுதியாக தமிழின உணர்வாளர்கள் அரசியல் காழ்ப்பு இன்றி ஆதரித்தே வந்துள்ளார்கள்.

ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை நின்ற துரோக சக்திகளுக்கு வேண்டுமானால் இந்த 'முள்ளிவாய்க்கால் முற்றம்', 'கருவேல் முள்ளாக' குத்தியிருக்கலாம்.; ஆனால், தமிழக அரசு முற்றத்தின் சுற்றுச் சுவர்களை இடித்துத் தள்ளிய தவறான செயல்களால் அதன் ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாடு களிலேயே பலத்த சந்தேகத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை தமிழக அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்றுப் போக்கை மாற்றியமைத்த பெரியார் படமும்,தமிழர் கல்விக் கண் திறந்த காமராசர் படமும் முற்றத்தில் இடம் பெறவில்லை என்பதில் நமக்கு அழுத்தமான முரண்பாடு உண்டு.

அந்த துரோகங்களை வேறு களங்களில் நாம் சந்திப்போம். ஆனாலும், இந்தப் பிரச்சினைகளோடு மட்டும் தொடர்புபடுத்தி முள்ளிவாய்க்கால் முற்றம் என்ற நினைவிடத்தை நாம் பார்க்கத் தயாராக இல்லை. கருத்து மாறுபாடுகளுக்கும் அப்பால் முள்ளிவாய்க்கால் முற்றத்தின் முக்கியத்துவத்தை நாம் மதிக்கிறோம்.

இந்திரா கொலையில் குற்றம்சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டவர் களுக்கு பொற்கோயில் வளாகத்தில் சிலை அமைக்கிறது சீக்கியர் இனம்; அவர்களின் குடும்பத்தினர் பொற்கோயிலுக்குள் கவுரவிக்கப்படு கிறார்கள். இது சீக்கியர் வெளிப்படுத்தும் உணர்வு. ஆனால், சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் சித்திரவதைகளுக்கும், பாலியல் வன்முறைகளுக்கும் பலியான தமிழர்களின் நினைவுச் சின்னங்களைக்கூட அவமதிக்கப்படும் நிலையில் தமிழினம் நிற்கிறது! தமிழின ஓர்மை சாதியமைப்பால் வலிமையற்றுப் போய் கிடக்கிறது!

முள்ளிவாய்க்கால் முற்றத்தின் சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டதையும், பழ. நெடுமாறன் உள்ளிட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டதையும் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவர்களை விடுதலை செய்து, இடிக்கப்பட்ட சுற்றுச் சுவரை திருப்பிக் கட்டித் தருவது ஒன்றே தமிழக அரசு தனது களங்கத்தைத் துடைத்துக் கொள்ளும் நடவடிக்கையாக இருக்க முடியும்!

# மயிலாடுதுறையில் 'புத்தகச் சோலை' புதிய கட்டிடம் திறப்பு




திராவிடர் விடுதலைக் கழகத்தைச்சார்ந்த தோழர் ந. விஜயராகவன், 'புத்தகச் சோலை' என்ற புதிய புத்தக விற்பனை நிலையத்தை மயிலாடுதுறையில் தொடங்கியுள்ளார். புத்தகச் சோலையின் புதிய கட்டிடத் திறப்பு விழா 17.11.2013 ஞாயிறு காலை 10.30 மணியளவில் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

நாகை மண்டல கழக அமைப்புச் செயலாளர் நா. இளையராசா வரவேற்புரையாற்ற, பெரு வணிகரும் பெரியாரியலாளருமான சா.மீ.சு. முத்துச் செல்வன், வே. மோகன்தாசு, நா.க. உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர்.

"ஒரு பெரியாரியல்வாதியாக நான் இருந்ததால்தான் கடும் நெருக்கடிகளை துணிவாக எதிர்கொண்டு இந்த நிறுவனத்தை என்னால் தொடங்க முடிந்தது" என்று உரிமையாளர் ந. விஜயராகவன் தனது ஏற்புரையில் குறிப்பிட்டார். மோ.சுகந்தி விஜயராகவன் நன்றி கூறினார். கழகத் தோழர்கள், நண்பர்கள் ஒத்துழைப்பு ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ள இந்த புத்தகச் சோலைக் கட்டிடம் கம்பீரமாக முகப்பில் பெரியார் படத்துடன் தோற்றமளிக்கிறது. இரண்டடுக்கு மாளிகையாக எழுந்து நிற்கும் இந்த புத்தகச் சோலையில் 100 தோழர்கள் அமரக் கூடிய கருத்தரங்க வளாகமும் இடம் பெற்றிருக்கிறது.

தமிழகத்திலேயே சென்னையைத் தவிர வேறு எங்கும் இவ்வளவு பெரிய அளவில் ஒரு புத்தக விற்பனை நிலையத்தைப் பார்க்க முடியாது என்ற அளவில் பல்லாயிரக்கணக்கான பல்துறைச் சார்ந்த தமிழ், ஆங்கில நூல்களுடன் இந்தப் புத்தகச் சோலை பொலிவுடன் மிளிர்கிறது. நினைவின் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ந. விஜயராகவன் ரூ.5000 நன்கொடையை பொதுச் செயலாளரிடம் வழங்கினார்.

## தொண்டினால் கிடைக்கும் புகழ்

"சிலர் புகழ் வேண்டாம், எனக்கு அதில் ஆசையே கிடையாது" என்று கூறுவார்கள். இது பகட்டுப் பேச்சேயன்றி நடைமுறையில் சாத்தியமானதல்ல; அது மட்டுமல்ல, புகழை விரும்பாதவன் மனித உணர்ச்சியோடு இருப்பவன் என்று கூறிவிட முடியாது. புகழ் நிலைத்திருக்க முடியும் என்றால் ஒரு நல்ல பாடகன் என்பவனின் புகழ் அவனோடு மறைந்துவிடும். அல்லது அவனைவிடப் பாடுபவன் தோன்றினால் அவன் உயிர் நாளிலேயே அவன் புகழ் அழிபட்டுவிடும். அதே போன்றுதான் ஒவ்வொரு தனிப்பட்ட புகழும். ஆனால், பொதுக் காரியத்துக்காக அதனால் மக்களுக்கு என்றும் நன்மையைப் பயக்கக் கூடியதாகச் செய்யப்படும் காரியங்களையும் அக்காரியவாதிகளின் புகழையும் என்றும் மறைக்க முடியாது. அவ்விதமான பெரியோர்கள் முதலில் ஏச்சுக்கும், தொல்லைக்கும் ஆளவார்கள். பின்னர்தான் நிலையாக விளங்கும்.

**– காயல் பட்டினத்தில் 'சீதக்காதி' நினைவுநாள் விழாவில் பெரியார் பேருரை – 24.4.47**

## குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம்

தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் சார்பில் விடுமுறைக் காலங்களில் குழந்தைகள் பழகு முகாம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. அடுத்தகட்டமாக வரும் அரையாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களான டிசம்பர் 25, 26, 27 ஆகிய 3 நாட்கள் திண்டுக்கல்லில் முகாம் நடைபெற உள்ளது. 3 நாட்களுக்கான பயிற்சி, உணவு, தங்குமிடம் மற்றும் சுற்றுலா அனைத்திற்கும் சேர்த்து கட்டணம் ரூ.750. டிசம்பர் 24 இரவே பெற்றோர்கள் குழந்தைகளை திண்டுக்கல் பயிற்சி மய்யத்திற்கு அழைத்து வந்துவிட வேண்டும். பெற்றோர்கள் மய்யத்தில் தங்க இயலாது. நகைகள், செல்போன்கள் அனுமதிக்க இயலாது.

***- ஆசிரியர் சிவகாமி / பேசி: 9842448175***
***மாநில ஒருங்கிணைப்பாளர்***
***தமிழ்நாடு அறிவியல் மன்றம்***

# மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம் வலுக்கிறது

மரண தண்டனை கூடாது என்று முதன்முதலில் இத்தாலியில் 1764இல் செசரே பெக்காரியா என்ற சட்ட வல்லுநர், "குற்றங்களும் தண்டனைகளும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் வலியுறுத்தினார். அக்கட்டுரையில், "காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரிகச் சமூகமாக மாறுவதற்கான வழிமுறைகளில் மரணதண்டனை ஒழிப்பு என்பது முதன்மையானதாகும். ஒருவருடைய உயிரைப் பறிக்க எப்படி எவருக்கும் உரிமையில்லையோ, அதேபோல, உயிரைப் பறிக்கும் உரிமை அரசுக்கும் இல்லை" என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் மரணதண்டனை தேவையா? இல்லையா? என்ற விவாதம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. மரண தண்டனை அதிகமாக நிறைவேற்றப்படும் அமெரிக்காவில்தான், பள்ளிச் சிறுவர்கள் கூட துப்பாக்கியால், உடன் படிக்கும் மாணவர்களைச் சுடுவதும், கொலைகளும் மிகுதியாக நடக்கின்றன. இந்தியாவில் பிரித் தானிய ஆட்சியில் 1860இல் உருவாக்கப் பட்ட குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் சில குறிப்பிட்ட குற்றங்களுக்கு மரண தண்டனை என்பது ஏற்படுத்தப் பட்டது.

உலகில் போர்ச்சுக்கல் நாடுதான் 1976இல் முதன்முதலாகச் சட்டப்படி மரண தண்டனையை ஒழித்தது. அதன்பின் மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகள் மரணதண்டனை ஒழிப்பில் முன்னோடியாக விளங்கின. ஆனால், கியூபாவில் மரண தண்டனைச் சட்டம் நீடிக்கிறது. ஆயினும் 2003 ஆம் ஆண்டுக்குப் பின் கியூபாவில் எவரும் தூக்கிலிடப்படவில்லை. அய்ரோப்பாவில் பெலாரஸ் நாடு தவிர, மற்ற நாடுகளில் மரணதண்டனை இல்லை. ஆப்பிரிக்க நாடுகளில்கூட சிலவற்றில் ஏட்டளவில் இச்சட்டம் நீடித்தாலும், பல ஆண்டுகளாக மரண தண்டனை நிறைவேற்றப்பட வில்லை. ஆனால் அகிம்சையை உலகிற்கே அளித்த புத்தர் முதல் காந்தியார் வரையில் பல சான்றோர்கள் வாழ்ந்த இந்தியாவில் மட்டும் மரணதண்டனைச் சட்டம் நீடிப்பது அவலமல்லவா?

உலக அளவில் கடந்த இருபது ஆண்டுகளில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கு ஆதரவு பெருகி வருகிறது. அய்க்கிய நாடுகள் மன்றத்தில் 193 நாடுகள் உள்ளன. 2007 ஆம் ஆண்டு மரணதண்டனைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை 104 நாடுகள் ஆதரித்தன. 54 நாடுகள் எதிர்த்தன. 29 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. 2012இல் இத் தீர்மானத்தை 111 நாடுகள் ஆதரித்தன. 41 நாடுகள் எதிர்த்தன. 34 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

டில்லியில் ஓடும் பேருந்தில் மாணவியை கொடூரமாக பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்டதையொட்டி பெண்கள் மீதான வன்முறை குறித்து ஆராய நீதிபதி வர்மா குழுவை மத்திய அரசு நியமித்தது. மரண தண்டனையை வர்மாகுழு பரிந்துரைக்கவில்லை.

நடுவண் அரசு, பாலியல் வல்லுறவுக் குற்றத்துக்கு மரண தண்டனை வேண்டாம் என்கிற வர்மாவின் கருத்தை ஏற்கவில்லை. பாலியல் வன்முறைக் குற்றத்துக்கு மரண தண்டனை என்ற சட்டத்தை நாடாளு மன்றத்தில் பா.ச.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றியது.

சிறப்பு ஆயுதப் படையினருக்கும் இச் சட்டம் பொருந்த வேண்டும் என்கிற வர்மா குழுவின் பரிந்துரையையும் நடுவண் அரசு புறக்கணித்து விட்டது. ஆயுதப்படையினரின் சிறப்பு அதிகாரச் சட்டம் என்பது 1958 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. ஜம்மு-காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் இது நடப்பில் உள்ளது. இந்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மக்களை ஆயுதப் படையினர் கொல்கின்றனர்; பெண்களை பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்குகின்றனர். 1979 முதல் மணிப்பூரில் ஆயுதப் படையினரால் கொல்லப்பட்ட 1,528 பேரின் பட்டியல் 2012 செப்டம்பரில் உச்சநீதிமன்றத்தில் தரப்பட்டது.

அதன் அடிப்படையில் நீதிபதி சந்தோஷ் எக்டே தலைமையில் மூவர் கொண்ட குழுவை உச்சநீதி மன்றம் அமைத்தது. இக் குழு அளித்த அறிக்கை, ஆயுதப் படையினர் தமக்குள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி எண்ணற்ற மனித உரிமை மீறல்களையும், பாலியல் கொடுமைகளையும், படுகொலைகளையும் செய்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

2004 ஆம் ஆண்டு மணிப்பூர் தலைநகர் இம்பாலில் உள்ள ஆயுதப்படை முகாமில் தங்கஜம் மனோரமா தேவி என்ற இளம் பெண் கொடிய முறையில் துன்புறுத்தப் பட்டு, வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். இதைக் கண்டித்து ஆயுதப் படை தலைமை அலுவலகத்தின் முன், மணிப்பூர் மகளிர் சிலர் ஆடையின்றி, 'எங்களை பாலுறவு கொள்ளுங்கள்' என்ற பதாகையுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர். இச்செய்தி அதிர்ச்சி அலைகளை எழுப்பியது. இக்கொடிய ஆயுதப் படையின் சிறப்பு அதிகாரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்று இளம் பெண் இரோன் ஷர்மிளா 2000 நவம்பர் 4 முதல் உண்ணா விரதம் இருந்து வருகிறார். கட்டாயப் படுத்தப்பட்டு மூக்கின் வழியாக அவருக்கு உணவு செலுத்தப்படுகிறது. தில்லி மருத்துவ மாணவி நிர்பயாவுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு ஒப்பாரி வைக்கும் அரசியல் கட்சிகள், ஆயுதப் படையின் சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்குவதற்கு ஏன் முன் வரவில்லை? நிர்பயா போலவே வேறு எண்ணற்ற பெண்கள் காவல்துறையினராலும், இராணுவத்தினராலும் சொல்லொணா பாலியல் அளவில் கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனரே!

நிர்பயா மீது பாலியல் வன்கொடுமை நிகழ்த்திய ஆறு பேரில் அகவையில் மூத்த இராம்சிங் (34) சிறையிலேயே தூக்குப் போட்டுக் கொண்டான். முகேஷ் சிங் (26), அக்ஷய தாக்கூர் (28), குப்தா (19), வினய் சர்மா (20) ஆகிய நால்வருக்கும் தில்லி விசாரணை நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித் துள்ளது. மற்றொரு குற்றவாளி முன்னாவுக்கு 17 அகவை என்பதால் சிறுவன் என்ற பிரிவின் கீழ் மூன்று ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. இந்த ஆறு பேரும் இராஜஸ்தான், உபி., பீகார் மாநிலங்களிலிருந்து பிழைப்புத் தேடி தில்லிக்கு வந்த ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். பொதுவாக நீதி வழங்கப்படுவதில் - தண்டனை விதிக்கப்படுவதில் வர்க்கச் சார்பும், சாதியப் பின்னணியும் காரணிகளாக உள்ளன. சிறைகளில் இருப்போரில் 90 விழுக் காட்டினர் கீழ்த்தட்டுச் சாதிகளைச் சார்ந்த ஏழை எளிய மக்களாகவே இருக்கின்றனர். அமெரிக்காவிலும் இதே நிலைதான். கறுப்பின மக்களே மிகப் பெருமளவில் சிறைகளில் இருக்கின்றனர்.

அரிதிலும் அரிதான வழக்கில் மரண தண்டனை விதிக்கலாம் என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பில் கொடூரமான முறையில் கொலை செய்தது மட்டும் அரிதினும் அரிதான வழக்காக கருதிவிட முடியாது. குற்றம் செய்தவரின் சமூகப் பின்னணியையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது.

உச்சநீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு கூறிய இந்த கருத்துக்கு எதிராக, மற்றொரு 2 நீதிபதிகளடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. குற்றத்தை மட்டும் பார்த்து மரணதண்டனை வழங்கலாம் என்று கூறியது அத் தீர்ப்பு. இந்தத் தவறான தீர்ப்பின் அடிப்படையில் தொடர்ந்து பலருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த முரண்பாட்டை ஓய்வு பெற்ற நீதிபதிகள், குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டினர்.

டெல்லியில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஒருவர், தனது மனைவியை கொலை செய்த வழக்கில், டெல்லி நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டில் இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அடங்கிய அமர்வு, தூக்குத் தண்டனையை 10 ஆண்டு சிறைத் தண்டனையாக குறைத்தது. குற்றவாளி திருந்தி வாழக் கூடியவர் அல்ல என்பதற்கான சான்றுகளை அரசு தரப்பு முன்வைக்கவில்லை என்பதால் தண்டனையை உச்சநீதிமன்றம் குறைத்தது. இதேபோல் தூக்குத் தண்டனை விதிக்கும்போது ஒவ்வொரு வழக்கிலும் குற்றவாளியின் சமூகப் பின்னணியை பார்க்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அனைத்து நீதிமன்றங்களுக்கும் அண்மையில் அறிவுறுத்தி கடிதம் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**(அக்.23 'இந்து' நாளேட்டில் மோனிக்கா வின்செட் எழுதிய கட்டுரையின் தழுவல்)**

## கழகப் பொறுப்பாளர்களுக்கு பெரியாரியல் பயிற்சி வகுப்புகள்

**மதுரை மண்டலம்**

மதுரை மண்டலத்திலுள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டக் கழகங்களில் உள்ள கிளை, நகர, ஒன்றிய, மாவட்டப் பொறுப்பாளர்களுக்கான 'பொறுப்பாளர் பயிற்சி வகுப்பு-நிலை 2' வரும் 30, டிசம்பர் 1 ஆகிய நாட்களில் திண்டுக்கல் கருந்திணையில் நடைபெறும்.

**சேலம் மேற்கு**

சேலம் மேற்கு மாவட்டத்திலுள்ள கிளை, நகர, ஒன்றிய, மாவட்டப் பொறுப்பாளர் களுக்கான 'பொறுப்பாளர் பயிற்சி வகுப்பு-நிலை 2' வரும் டிசம்பர் 7, 8 ஆகிய நாட்களில் மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளியில் நடைபெறும்.

தொடர்புக்கு : அ. சக்திவேல்
பேசி: 94425 13177

**கோவை மண்டலம்**

கோவை மண்டலத்திலுள்ள கோவை மாநகரம், புற நகரம், திருப்பூர் மாவட்டக் கழகங்களில் உள்ள கிளை, நகர, ஒன்றிய, மாவட்டப் பொறுப்பாளர்களுக்கான 'பொறுப் பாளர் பயிற்சி வகுப்பு-நிலை 2' வரும் டிசம்பர் 14, 15 ஆகிய நாட்களில் உடுமலையில் நடைபெறும்.

அனைத்துப் பயிற்சிகளிலும் கழகப் பொறுப்பாளர்களும், கழகத்தின் முன்னணி அமைப்புகளின் பொறுப்பாளர்களும் அவசியம் தவறாது பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**– பால். பிரபாகரன்,**
**பரப்புரைச் செயலாளர்**

## நான் பலி கடா ஆகிறேன்– தமிழனுக்காக

“இருந்தால் என் வைப்பாட்டி மகனாக இரு; இழிமகனாக இரு; இல்லாவிட்டால் நாட்டைவிட்டு, இந்து மதத்தை விட்டு வெளியேறு அல்லது ஜெயிலில் இரு” என்றால், “இது உங்கப்பன் உங்க அம்மா சம்பாதித்த நாடா? அவர்கள் பிறந்த நாடா? என் நாட்டில் உனக்கு என்ன வேலை? வெளியேறு, வெளியேறு, மான வெட்கங் கெட்டவனே, வெளியேறு” என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

சமுத்திரம் எனக்கு முழங்கால் அளவு தண்ணீர்தான்.

அட முட்டாள்களா! உங்களுக்கும் சேர்த்துத்தானே பாடுபடுகிறேன்.

விஷமப் பிரச்சாரம் செய்யும் உங்களில் ஒருவன் வாயில்கூட 'நான் ஏன் சூத்திரன்' என்பது வருவதில்லையே. டில்லியோடு எழவு எடுப்பதற்கு முன் உங்களோடு எழவு எடுக்க வேண்டியிருக்கிறதே!

தமிழன் யோக்கியதை எனக்குத் தெரியும். 75 வருடமாய் தெரியும். தமிழனுக்கு ஆக நான் பலிகடா ஆகிறேன்.

மானமுள்ளவர்கள் வாருங்கள். முடியாத யோக்கியர்கள், யோக்கியர்களுக்குப் பிறந்தவர்கள் வாலை அடக்கிக் கொண்டு யோக்கியமாய் வாழுங்கள்.

**– தந்தை பெரியார்**

'புரட்சிப் பெரியார் முழக்கம்'
**இதழுக்கு உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

DATE OF PUBLICATION 20.11.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

### கழக வளர்ச்சிக்கு ரூ.50,000 நன்கொடை

# கழக செயலவைத் தலைவர் சு. துரைசாமி-சுசீலா இல்ல மணவிழா



திராவிடர் விடுதலைக் கழக செயலவைத் தலைவர் சு.துரைசாமி-சுசீலா இணையரின் மகன் துரை. சக்திக்குமார்- சா. பானுப்பிரியா வாழ்க்கை இணை ஏற்பு விழா, திருப்பூரில் நா.பழனிச்சாமி-பாப்பம்மாள் நினைவரங்கத்தில் 14.11.2013 வியாழன் காலை 9 மணியளவில் சிறப்புடன் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைத்தார். பொருளாளர் இரத்தினசாமி, பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், ஆசிரியர் சிவகாமி வாழ்த்துரை வழங்கினர். செயலவைத் தலைவர் சு.துரைசாமி வரவேற்று உரையாற்றினார். மணமக்கள் நன்றி கூறினர். கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். மணவிழா மகிழ்வாக தோழர் சு. துரைசாமி இயக்க வளர்ச்சிக்கு ரூ.50,000 பொதுச் செயலாளரிடம் வழங்கினார். நிதி - பொருளாளரிடம் இயக்க வளர்ச்சி நிதிக்காக வழங்கப்பட்டது.

## மயிலாடுதுறை தோழர் நாக. இரகுபதி முடிவெய்தினார்



மாணவப் பருவத்திலேயே திராவிடர் கழகத்திலும், பகுத்தறிவாளர் கழகத்திலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, மயிலாடுதுறையில் தொடர்ந்து பெரியாரியல் கொள்கையைப் பரப்பி வந்த தோழர் நாக. இரகுபதி (60), கடந்த 18 ஆம் தேதி இரவு 9 மணியளவில் முடிவெய்தினார். தஞ்சை முள்ளி வாய்க்கால் முற்றம் நிகழ்வில் பங்கேற்க தனது உடல்நலத்தையும் பொருட் படுத்தாமல் அவர் சென்றார். மேடையில் ஒரு அமர்வில் உரையாற்றி முடித்தவுடன் அவர் மயக்கமுற்றார். உடன் தஞ்சை தனியார் மருத்துவமனையில் பழ.நெடுமாறன் அவர்கள் முயற்சியால் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி முடிவெய்தினார். ஏற்கனவே இரு முறை இருதய அறுவை சிகிச்சைக்கு உள்ளானவர் தோழர் இரகுபதி. ஆனாலும் உடல்நலத்தைவிட கொள்கைகளை நோக்கியே அவரது இதயம் ஓடிக் கொண்டிருந்தது. முள்ளி வாய்க்கால் முற்றம் மேடையோடு அவர் விடைபெற்றுக் கொண்டுவிட்டார்.

1970 ஆம் ஆண்டு வேளாங்கன்னியில் பெரியார் முன்னின்று நடத்திய பயிற்சி வகுப்பில் நானும் அவரும் ஒன்றாக பயிற்சி பெற்று, அன்றைய கீழத் தஞ்சை மாவட்டத்தில் கிராமம் கிராமமாக கூட்டங்களில் பங்கேற்றுப் பேசினோம். நாக. இரகுபதி நல்ல பேச்சாளர், சீரிய களப்பணியாளர். மாநாடுகள், கூட்டங்கள், நிகழ்ச்சிகள் என்றால் ஊர்தோறும் ஓடிப்போய் பங்கேற்பவர்.

பெரியாரியல்வாதிகள் பலரும் தொண்டற்றிய மயிலாடுதுறை வரலாற்றில் நாக. இரகுபதிக்கும் நிச்சயம் இடம் உண்டு.

1972 இல் நான் ‘விடுதலை’ அலுவலகத்தில் பணியாற்ற மயிலாடுதுறையிலிருந்து அறிமுகமில்லாத சென்னைக்கு வந்தபோது, என்னுடன் சென்னை வரை வந்து வழியனுப்பிய தோழர். வாழ்க்கையையும் கொள்கையையும் இணைந்து நடத்திய பயணத்தில் சக தோழராக இணைந்தும் - விலகியும் - இணைந்தும் பயணித்துக் கொண்டே வந்த அவர், அவ்வப்போது அரசியல் பக்கம் திரும்பினாலும், பெரியார் கொள்கை என்பதே அவரது உறுதியான அடித்தளமாக இருந்தது. ‘கண்ணாரத் தெரு’ மாடியில் அமைந்திருந்த பகுத்தறிவாளர் கழகத்தில் இரவும் பகலும் தோழர்கள் கூடி மகிழ்ந்து, சிரித்து, விவாதித்து, கொள்கைக் குடும்பமாய் வாழ்ந்த அந்த இனிமையான தருணங்கள் மறக்க முடியாதவை. சொந்த வாழ்க்கையைவிட பெரியார் கொள்கை வழி பொது வாழ்க்கையையே நேசித்த ஒரு தோழர் - விடைபெற்றுக் கொண்டார்.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும் கொள்கையாளர்களும் அனைத்துக் கட்சியினரும் அவரது நீண்டநாள் நண்பர் குழாமும் திரண்டு வந்து வீரவணக்கம் செலுத்தினர். நவம்பர் 19 ஆம் தேதி பிற்பகல் அவரது உடல் எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி எரியூட்டப்பட்டது.

நண்பன் இரகுபதிக்கு வீரவணக்கம்!

**– விடுதலை இராசேந்திரன்**

### நன்கொடை திரட்டும் இயக்கம்

# கழகப் பொறுப்பாளர்க மாவட்டம் தோறும் பயணம்

*தமிழர் சமுதாயத்தின் விடிவெள்ளியாம் பெரியார் கொள்கைகளுக்காக கொளத்தூர் மணி தலைமையில் செயல்படும் இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம்.*

**திராவிடர் விடுதலைக் கழகம் :**

- ஜாதி-தீண்டாமைக்கு எதிராக களமிறங்கிப் போராடுகிறது.
- மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் மதவெறி சக்திகளுக்கு எதிராக குரல் கொடுக்கிறது.
- பன்னாட்டு நிறுவனங்கள் தனியார் தொழில்துறைகளில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுக்காக இயக்கங்களை நடத்துகிறது.
- அரசு நிறுவனங்கள் மதச்சார்பற்றதாய் செயல்பட போராடுகிறது.
- இராஜபக்சேயின் இனப்படுகொலை போர்க் குற்றங்களுக்கு எதிராய் நீதி கேட்டு நிற்கிறது.
- மரணதண்டனைக்கு எதிராகவும் மக்கள் விரோத கூடங்குளம் அணுமின் திட்டங்களுக்கு எதிராகவும், பறிக்கப்படும் தமிழர் வாழ்வுரிமைகளுக்காகவும் தோழமை அமைப்புகளோடு களமிறங்கி செயலாற்றுகிறது.
- பெண்ணடிமைக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிராக மக்களைச் சந்தித்து கருத்துகளை பரப்புகிறது.
- மனித உரிமைகளுக்கும் அடக்குமுறை சட்டங்களுக்கும் எதிராக குரல் கொடுக்கிறது.
- ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வார ஏட்டை 12 ஆண்டுகளாக நடத்துவதோடு, பெரியாரிய சிந்தனைகளை நூல்களாகவும் வெளியிட்டு பரப்பி வருகிறது.

தொய்வில்லா களப்பணியில் தொடர்ச்சியாக நிற்கும் திராவிடர் விடுதலைக் கழகம், அதன் களப்பணிகளுக்காக தோழமை சக்திகளை - ஆதரவாளர்களை - தமிழர் நலன் பேணுவோரை - நிதி கேட்டு நாடி வருகிறது! ஆதரவுக்கரம் நீட்டுங்கள்! களப்பணிக்கு தோள் கொடுங்கள்!

**பொறுப்பாளர்கள் சுற்றுப் பயண விவரம்:**

மக்கள் சந்திப்பு - நன்கொடை திரட்டும் இயக்கத்துக்காக கழகப் பொறுப் பாளர்கள், பொருளாளர் ரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மதுரை மண்டல அமைப்புச் செயலாளர் இராவணன், களப்பணியாளர் செந்தில் ஆகியோர் தோழர்களை நேரடியாக சந்தித்து, நன்கொடைப் புத்தகங்களை வழங்கி, நிதி திரட்டுதல் தொடர்பாக கழகத் தோழர்களை சந்தித்துப் பேசுகிறார்கள்.

பயணத் திட்ட விவரம்: நவம். 20 - மேட்டூர்; 21 - கோபி; 22 - தர்மபுரி, கிருட்டிணகிரி; 24 - சேலம், நாமக்கல்; 25 - கோவை; 26 - திருப்பூர்

**– தலைமைக் கழகம்**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

## தி.க. பொருளாளர் சாமிதுரை உடலுக்கு கழகத் தோழர்கள் இறுதி மரியாதை

9.11.2014 அன்று காலையில் முடிவெய்திய திராவிடர் கழகப் பொருளாளர் கள்ளக்குறிச்சி கோ. சாமிதுரை அவர்களின் உடலுக்கு விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தோழர்கள் கி.ஆசைத்தம்பி, ச. பெரியார் வெங்கட், செ. நாவாப் பிள்ளை, க. இராமன் உள்பட தோழர்கள் பலரும் சென்று மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 21st November 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | நவம்பர் 28, 2013 | புரட்சி 12 | முழக்கம் 46 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...

✦ காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு தெலுங்கானா பகுதி காங்கிரஸ் தலைவர்கள் கோயில் கட்டி தினமும் வழிபாடு நடத்தி வருகிறார்கள். **– செய்தி**

கடவுள் இருக்கிறார் என்று சொல்லக்கூடிய ஒரே கோயில் இதுவாகத்தான் இருக்கும்!

✦ மது பாட்டில்களில் – இந்து கடவுள்களின் படங்களை அச்சிடும் ஆஸ்திரேலியா நாட்டைக் கண்டித்து சென்னையில் இந்து முன்னணி போராட்டம். **– செய்தி**

நியாயம்தாங்க... இதேபோல் இந்துமதச் சின்னங்களை நெற்றியிலும் கழுத்திலும் போட்டுக் கொண்டு மதுபாட்டில்களை உடைக்கும் இந்து குடிமகன்களை எதிர்த்தும் ஒரு போராட்டம் நடத்துங்க!

✦ தமிழக மீனவர்களை நாங்கள் தாக்கவில்லை என் கிறது இலங்கைக் கடற்படை. அப்படியானால் தாக்குவது யார் என்று அவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளோம். **– இந்திய கடற்படை துணை தளபதி பேட்டி**

திமிங்கிலங்களும் முதலைகளும் தமிழக மீனவர்களை மட்டும் குறி பார்த்து தாக்கிவிட்டு பிறகு கடலுக்குள் ஓடி விடுகின்றன என்று இலங்கை கடற்படை விளக்கம் கூறலாம். அந்த விளக்கத்தை இந்தியக் கடற்படையும் ஏற்கலாம். காதுல பூ சுத்தாதீங்கய்யா...

✦ 60 கோடி இந்தியர்களுக்கு கழிப்பறை வசதி இல்லை. **– உலக வங்கி அதிர்ச்சி தகவல்**

அதுவா இப்ப முக்கியம்! எங்கள் கடவுளர்களுக்கே கோயில்களில் கழிப்பறை இல்லை. முதலில் அதைக் கவனியுங்கள்!

✦ அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் திருவண்ணாமலை கோயிலுக்கு வந்த அமைச்சர்கள் பதவி பறிபோனதால் இந்த ஆண்டு தீபத் திருவிழாவில் எந்த அமைச்சரும் கலந்து கொள்ளவில்லை. **– தினமலர் செய்தி**

அமைச்சர்களுக்கு பகுத்தறிவை ஊட்டிய ‘அண்ணாமலையானு’க்கு ‘அரோகரா!’

✦ காவல்துறையில் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மோப்ப நாய்கள் பணி ஓய்வுக்குப் பிறகு உரிய பராமரிப்பு இன்றி அவதிப்படுகின்றன. **– செய்தி**

பாவம்! பொய் வழக்குப் போடத் தெரியாத இந்த வாயில்லா ஜீவன்களுக்கு தமிழக அரசின் பரிசுத் தொகையும், பதக்கமுமா கிடைத்துவிடப் போகிறது?

✦ எந்தக் குற்றமும் செய்யாத கொளத்தூர் மணியை நள்ளிரவில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தது, கண்டனத்துக்குரியது. **– தொல் திருமாவளவன்**

சட்டம் தெரியாமல் பேசக் கூடாது. நள்ளிரவில் வீட்டில் உறங்குவதே இந்திய இறையாண்மைக்கு ஆபத்தானது தான்!

✦ மகளிரால் மகளிருக்காக நடத்தப்படும் ‘பாரதிய மகளிர்’ வங்கியை மும்பையில் மன்மோகன் திறந்து வைத்தார். **– செய்தி**

அது என்ன ‘பாரதிய’? அது இந்தியாவில் தான் இருக்கிறதா?

✦ திருவண்ணாமலை, ராமேசுவரம் கோயில்களுக்கு பக்தர்கள் காணிக்கை செலுத்திய பசுமாடுகள் மாயம். **– தினமலர் செய்தி**


இதுக்கெல்லாம் சி.பி.அய். விசாரணை நடத்த முடியாதுங்க... அவுங்க மாயமான கோப்புகளைத் தேடுவதற்கே நேரம் போதல்ல.

✦ அமேதி தொகுதியில் மக்களை சந்தித்து குறைகளைக் கேட்க 100 காங்கிரஸ் தொண்டர் களுக்கு பிரியங்கா ‘மோட்டார் பைக்’குகளை பரிசு வழங்கினார். **– செய்தி**

மக்கள் தரும் புகார் மனுக்களை ஏற்றிக்கொண்டு வருவதற்கு அப்படியே ஆளுக்கொரு ஜீப்பும் கொடுத்துடுங்க.

### கொளத்தூர் மணி, தோழர்களை விடுதலை செய்

# அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட தோழர்களை விடுதலைச் செய்யக் கோரியும், பழ. நெடுமாறன் உள்ளிட்டோர் மீதான வழக்குகளைத் திரும்பப் பெறக் கோரியும் அடக்குமுறை சட்டங்கள் எதிர்ப்பு கூட்டமைப்பு சார்பில் நவம்பர் 23 ஆம் தேதி காலை 11 மணியளவில் சென்னை சேப்பாக்கத்தில் எழுச்சியான கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது. மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப் பினருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா தலைமை தாங்கினார்.

கொளத்தூர் மணியை விடுதலை செய்யக் கோரியும், அடக்குமுறை சட்டங்களை எதிர்த் தும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், எஸ்.டி.பி.அய். கட்சி மாநிலத் தலைவர் தெகலான் பாகவி, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல் முருகன், தோழர் தியாகு, தமிழ்நாடு மக்கள் கட்சித் தலைவர் தங்கத் தமிழ்வேலன், த.தே.பொ.க. சார்பில் க. அருண்பாரதி, தமிழர் குடியரசு முன்னணி சார்பில் ஜெயப்பிரகாசன், தமிழ்த் தேச மக்கள் கட்சித் தலைவர் தமிழ்நேயன், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் மக்கள் விடுதலை செயலக உறுப்பினர் சதீஷ், சேவ் தமிழ் இயக்க சார்பில் பரிமளா, மே 17 இயக்க சார்பில் திருமுருகன், காந்தி ஆகியோர் உரையாற்றினர். தோழர் அருண்சோரி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். புதுவை தி.வி.க. சார்பில் தோழர் அய்யப்பன் தலைமையில் தனிப் பேருந்தில் தோழர்கள் வந்திருந்தனர்.

தொல். திருமாவளவன் உரையாற்றுகையில், “ஒரு கட்சியின் அல்லது இயக்கத்தின் தொண்டர்கள் நடத்திய போராட்டங்களுக்காக அக்கட்சியின் தலைவர்களை பொறுப்பாக்கி கைது செய்வது என்றால் தமிழகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சிறையில்தான் அடைக்க வேண்டும். தேசியப் பாதுகாப்புச் சட்டம், குண்டர் சட்டம் என்ற அடக்குமுறை சட்டங்கள் தமிழகத்தில் ஆட்சிக்கு வரும் தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகளில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. எதிர்க்கட்சி கூட்டணிகள் மீது மட்டுமல்ல, ஆளும் கட்சி கூட்டணிகள் மீதும் பாய்கிறது. நான் தி.மு.க. கூட்டணியில் இருந்தபோது ஈழத் தமிழர்களுக்காக மறைமலை நகரில் உண்ணா விரதம் இருந்தபோது, ஏராளமான விடுதலை சிறுத்தைகள் மீது தி.மு.க. ஆட்சிதான் குண்டர் சட்டங்களை போட்டது. முள்ளிவாய்க்கால் முற்றத்தை உருவாக்கிய பழ. நெடுமாறன் போன்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியை எதிர்க்காதவர்கள், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு கடுமையாக பாடுபட்டவர்கள்கூட இந்த முற்றத்தை உருவாக்கிய குழுவில் இடம் பெற்றவர்கள்தான், அவர்கள் மீதே வழக்குப் போடப்பட்டு கைது செய்யப்படுகிறார்கள்” என்றார் திருமாவளவன்.

தோழர் தியாகு, தனது உரையில், “இந்தியா சுதந்திரம் பெற்றபோது ரவுலட் போன்ற அடக்குமுறை சட்டங்களை அமுல்படுத்த மாட்டோம் என்று கூறியவர்தான் நேரு. ஆனால், அவர் ஆட்சியிலும் அடக்குமுறை சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களை தடுப்புக் காவல் சட்டத்தில் கைது செய்தார்கள். இந்திரா காந்தி அவசர நிலை காலத்தில் உருவாக்கிய 42 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் போதுதான் ‘இந்தியா’ என்பதற்கு பதிலாக ‘இந்திய தேசியம்’ என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். உள்நாட்டு அவசர நிலையைப் பிரகடனம் செய்த இந்திரா, அடுத்து வந்த தேர்தலில் படுதோல்வியை சந்தித்தார். மொரார்ஜி தலைமையில் ஜனதா பதவிக்கு வந்தபோது உள்நாட்டு அவசர நிலையை எவரும் எதிர்காலத்தில் பயன்படுத்த முடியாத அளவுக்கு சட்டத்தில் திருத்தம் செய்தது. ஆனால், இப்போதுள்ள தேசிய பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது அந்த ஆட்சியில்தான்.

தோழர் கொளத்தூர் மணிக்கு சிறை ஒன்றும் புதிது அல்ல. தடா சட்டத்தின் கீழும் தேசியப் பாதுகாப்புச் சட்டங்களின் கீழும் பல முறை கைது செய்யப்பட்டுள்ளார். கடந்த முறை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# மறு விசாரணை வேண்டும்

உண்மைகள் வெளிச்சத்துக்கு வர 23 ஆண்டுகாலம் தேவைப்பட்டிருக்கிறது. ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனையை சந்தித்துள்ள பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் தூக்குத் தண்டனைக் குறித்து உச்சநீதிமன்றத்தில் மறு விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்போது மரணதண்டனை எதிர்ப்பு இயக்கம் தயாரித்து வெளியிட்டுள்ள ‘உயிர் வலி’ ஆவணப்படம் இந்த வழக்கில் ஒரு முக்கிய திருப்பத்தை உருவாக்கி விட்டது. ராஜீவ் கொலைக்கான மனித வெடிகுண்டு ‘பெல்ட்’டில் பயன்படுத்தப்பட்டது, போறிவாளன் வாங்கித் தந்த பேட்டரிதான் என்பதே அவரை தூக்கு மரத்தின் கொட்டடியில் கொண்டுபோய் நிறுத்துவதற்கான ஒரே சான்றாதாரம்.

தடா சட்டத்தின் கீழ் துன்புறுத்தி பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை இதற்கு சான்று ஆவணமாக உச்சநீதிமன்றமே ஏற்றுக் கொண்டது. பேரறிவாளனிடம் சாட்சியத்தைப் பதிவு செய்த சி.பி.அய். அதிகாரி தியாகராசன், அய்.பி.எஸ். இப்போது இந்த ஆவணப் படத்துக்கு வழங்கியுள்ள பேட்டி, புதிய திருப்பத்தை உருவாக்கி விட்டது. பேரறிவாளன் தன்னிடம் தந்த ஒப்புதல் வாக்குமூலத்தை உள்ளது உள்ளபடியே பதிவு செய்யாமல் தவிர்த்து விட்டேன் என்று இப்போது அதிகாரி ஒப்புதல் தந்துள்ளார்.

“என்னிடம் எதற்காக பேட்டரி வாங்கச் சொன்னார்கள் என்பது எனக்குத் தெரியாது என்று பேரறிவாளன் சொன்னார். ஆனால், நான் அதைப் பதிவு செய்யவில்லை. அப்போது புலனாய்வுப் பணிகள் வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த நிலையில், குறிப்பிட்ட இந்த வாக்குமூலத்தை மட்டும் நான் பதிவு செய்யவில்லை. சரியாகச் சொன்னால், சட்டப்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஒருவரிகூட விடாமல் அப்படியே பதிவு செய்ய வேண்டும் என்பதுதான் சட்டம். ஆனால் நடைமுறையில் நாங்கள் அவ்வாறு செய்வதில்லை” என்று கூறியிருக்கிறார் அந்த அதிகாரி.

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் தரும் ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியும் என்ற நிலையில், அதிகாரிகள் வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்வதில்லை என்று சொல்கிறார்கள். ஆக, எத்தகைய கொடூர சட்டத்தின் கீழ் ஒரு மிகப் பெரிய தலைவரின் கொலை வழக்கு விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது இதற்காக இந்த அரசு தலைகுனிந்து வெட்கப்பட வேண்டும். “தேசத் தந்தை” காந்தியின் கொலை வழக்கேகூட ரகசியமாகவோ இது போன்ற ஆள் தூக்கி சட்டங்களின் கீழோ விசாரிக்கப்படவில்லை.

1991 ஆம் ஆண்டு மே 7 ஆம் தேதி சிவராசன், ஈழத்தில் பொட்டு அம்மானிடம் ஒயர்லெஸ் கருவி வழியாக பேசியபோது இந்த சதித் திட்டம் தனக்கும், சுபா, தணுவுக்கும் மட்டுமே தெரியும் என்று கூறுவது வழக்கின் சாட்சி ஆவணமாக ஏற்கப்பட்டது. பேரறிவாளன் பேட்டரியை வாங்கிக் கொடுத்ததோ மே 7 ஆம் தேதிக்கு முன்! ஆக, ராஜீவ் கொலை செய்யப்படும் சதித் திட்டம் பற்றி ஏதும் பேரறிவாளனுக்கு தெரியாது. எனவே அவர் வாங்கித் தந்த பேட்டரி, ராஜீவ் கொலைக்கு பயன்படுத்தப்படப் போகிறது என்பதும் தெரியாது. எனவே கொலைச் சதியில் பேரறிவாளனை தொடர்புபடுத்தவே முடியாது. இந்த கருத்துகள் தமிழ் நாட்டில் மரணதண்டனை எதிர்ப்பு இயக்கத்தின் எத்தனையோ மேடைகளில் முன்வைக்கப்பட்டு வந்ததுதான்.

பேரறிவாளன் சிறையிலிருந்து குடியரசுத் தலைவருக்கு எழுதிய மடலில் இந்தக் கருத்தை அழுத்தமாகவே பதிவு செய்திருக்கிறார். மே 7 ஆம் தேதிக்கு முன்பு வரை ராஜீவ் கொலை பற்றிய சதித் திட்டம் மூவரைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது என்ற ஆவண சாட்சியத்தை நீதிமன்றம் நளினிக்கும், ரவிச்சந்திரனுக்கும், ராபர்ட் பயாஸ், ஜெயக்குமார் போன்றோருக்கும் பயன்படுத்தி அவர்களை தூக்கிலிருந்து விடுவித்தது. ஆனால், உச்சநீதிமன்றம் தனக்கு மட்டும் எதிராகப் பயன்படுத்தியது ஏன் என்று அவர் எழுப்பிய கேள்வி அப்படியே நீடிக்கிறது. அதே கருத்தைத்தான் இப்போது தியாகராசன், அய்.பி.எஸ்.சும், வேறு அழுத்தமான மொழியில் கூறியிருக்கிறார்.

உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கிவிட்டது என்பதோ, குடியரசுத் தலைவர் கருணை மனுவை தள்ளுபடி செய்துவிட்டார் என்பதோ, வழக்கின் இறுதிப் புள்ளியாகிட முடியாது. தண்டனை விதிக்கப்பட்டப் பிறகு, இந்த 22 ஆண்டுகால ஓட்டத்தில் தீர்ப்புகளைத் தாண்டிய செயல்பாடுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. ‘தடா சட்டம் நீக்கப்பட்டது அதற்குப் பிறகுதான். கருணை மனுக்கள் மீதும் உச்சநீதிமன்றம் தலையிட முடியும் என்று உச்சநீதிமன்றம் குறுக்கிடும் உரிமைகளை கையில் எடுத்ததும் அதற்குப் பிறகுதான். இறையாண்மையுள்ள தமிழக சட்டமன்றம், மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பதும் அதற்குப் பிறகுதான். ‘அரிதிலும் அரிதான வழக்கு’ என்பதற்கு நீதிமன்றம் வகுத்துத் தந்த நெறிமுறைகளை நீதிமன்றமே மீறியது கண்டறியப்பட்டதும் அதற்குப் பிறகுதான். ‘பல்நோக்கு கண்காணிப்பு ஒழுங்குமுறை ஆணையம்’ (எம்டி.எம்.ஏ.) என்ற அமைப்பின் விசாரணைக்கு இந்த வழக்கு கொண்டு வரப்பட்டிருப்பதும் இதற்குப் பிறகுதான். தண்டனை உறுதியாக்கப்பட்டப் பிறகு, தொடரும் இந்த நிகழ்வுகளை இந்த வழக்கிலிருந்து துண்டித்துவிட முடியாது.

மேலை நாடுகள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டப் பிறகு அதை மறுபரிசீலனை செய்யும் மேல்முறையீட்டு அமைப்புகள் இருக்கின்றன. இந்தியாவில் அப்படி ஏதும் இல்லை. தீர்ப்பளித்த நீதிபதிகளிடமே மறுபரிசீலனைக்கு மனு செய்யவும் அவர்கள் நிராகரிப்பதுமான சடங்குகளே ‘சடங்கு ரீதியாக’ பின்பற்றப்படுகிறது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் இல்லாத வேறு அமர்வின் முன் மேல் முறையீட்டு விசாரணை நடைபெற வேண்டும் என்ற கருத்தும் உச்சநீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த முக்கியமான கோரிக்கை பரிசீலிக்கப்படவேண்டும்.

தூக்குத் தண்டனையை உறுதி செய்த உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி.தாமஸ், இப்போது தூக்குத் தண்டனைக்கு எதிராக இந்த ஆவணப் படத்தில் உறுதியாக குரல் கொடுத்திருக்கிறார். 23 ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பிறகு தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவது ஒரு குற்றத்துக்கு வழங்கும் இரண்டு தண்டனையாகிவிடும். அதற்கு இந்தியாவில் இடமில்லை என்று கூறுவதோடு, இவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

தவறாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம்; முறையற்ற விசாரணை; ஒரு சார்பாக சான்று ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டது என்று பல்வேறு ‘வடுக்களை’ சுமந்து நிற்கிறது இந்த வழக்கு! பேரறிவாளன் உள்ளிட்ட மூவரையும், நளினியையும் விடுதலை செய்வதே இதற்கான நீதி!

மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம் வெளிக்கொண்டு வந்துள்ள இந்த ஆவணப்படம், மரணதண்டனை எதிர்ப்பு இயக்கத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக் காட்டியிருக்கிறது. அந்த ஆவணத்தை உருவாக்கிய தோழர்களின் உழைப்பு வீண் போய்விடக் கூடாது; அதற்கான வலிமையான இயக்கங்கள் நடத்தப்பட்டாக வேண்டும்!

# தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட



தோழர்கள் மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி வழக்கு மனுக்கள் தயாரிப்புப் பணிகள் முடிந்துள்ளன. தமிழ்நாடு அறிவுரைக் குழுமம், மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் தமிழக அரசு உள்துறைக்கு மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் நவம்பர் 25 அன்று தாக்கல் செய்யப்பட்டது. கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் முழு வீச்சில் பணியாற்றி வருகிறார்கள். தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன் உடனிருந்து உதவி வருகிறார்.

காவல்துறையினரால் வழக்கில் தொடர்புபடுத்தப்பட்ட தபசி. குமரன், சேலம் டேவிட், சென்னை ஜான் ஆகிய தோழர்களுக்கு முன் பிணையை ஏற்கனவே உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

தோழர் கொளத்தூர் மணியை 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே சிறையில் பார்வையாளர்களை சந்திக்க அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர்கள் அவ்வப்போது சந்தித்து வருகிறார்கள்.

## பூஜைக்கு போகும் விண்வெளி ராக்கெட்டுகள்: ‘பாரத ரத்னா’ விஞ்ஞானி கண்டனம்

பாரத ரத்னா விருது பெற்றுள்ள விஞ்ஞானி சி.ன்.ஆர். ராவ், பெங்களூரில் நவம்பர் 24 அன்று பேட்டி அளித்தார். அப்போது ஒரு செய்தியாளர் “இஸ்ரோ சார்பில் ஒவ்வொரு முறையும் ராக்கெட் அனுப்பும் முன்பு திருப்பதி ஏழுமலையான் கோவிலில் அதன் மாதிரி வடிவத்தை வைத்து பூஜை செய்யப்படும் வழக்கம் இருந்து வருகிறது. அது பற்றி உங்கள் கருத்து என்ன?” என்றார். அதற்கு பதில் அளித்த விஞ்ஞானி சி.என்.ராவ், “அது மூட நம்பிக்கை. எனக்கு அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. பயத்தின் காரணமாக மனிதர்கள் பூஜைகள் செய்தால் தாம் செய்கின்ற பணி வெற்றி பெறும் என்று நம்புகிறார்கள். அதற்கு என்ன செய்ய முடியும்? இதுபோன்ற நம்பிக்கைகள் எனக்கு இல்லை. நான் ஜோதிடத்தையும் நம்புவதில்லை. மேலும் நான் தகவல் தொழில்நுட்பத்திற்கு எதிரானவன் என்ற கருத்தும் நிலவுகிறது. அதில் உண்மையில்லை. சீனாவில் அறிவியல் துறையில் அதிக அளவில் முதலீடு செய்யப்படுகிறது. இந்தியர்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொள்கிறார்கள். அறிவியல் துறையில் முதலீடு செய்வதை தவிர இந்தியாவிற்கு வேறு வழி இல்லை. அறிவியல் துறையில் பின்தங்கிக் கொண்டு இந்தியா வல்லரசாக இருக்க வாய்ப்பில்லை” என்று கூறினார்.

## பட்டாசு வெடிப்பு வேண்டாம்!

கழக நிகழ்வுகளில் பட்டாசுகள் வெடிப்பதை தோழர்கள் தவிர்க்கக் கோருகிறோம். ஒவ்வொரு பட்டாசுக்குள்ளும் குழந்தைத் தொழிலாளர்கள் உழைப்புச் சுரண்டல் அடங்கியிருக்கிறது.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்த பின்பு எமது மாவீரர்களுடைய, மக்களுடைய, ஈகங்களை மதிக்காமல் எவ்வாறு இத்தகைய பழி பாவங்களை செய்ய முடிகிறது. இவர்களை என்றோ ஒரு நாள் தர்மம் தண்டிக்கும்’ எனத் தலைவர் சொன்னமை, சிறுவயதில் நாம் பிழைகள் விட்டபோது, ‘பாவம் செய்யக் கூடாது’ என்று சொல்லி எம்மை வழிப்படுத்துகின்ற பெற்றோர்களின் மனநிலையை ஒத்திருக்கிறது. எத்தகைய உயர்நிலையில் இருந்தாலும் மனதாலும், செயலாலும், அவர் மிகவும் எளிமையானவர்.

ஓயாத அலைகள் - 01 சமரில் நடைபெற்ற சம்பவம் ஒன்றையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. போரில் இறந்த சிங்கள இராணுவ வீரர்களின் உடலுக்கு எமது போராளிகள் உரிய மரியாதை கொடுக்காமல்விட்டதுடன், சிறீலங்கா தேசியக் கொடியையும் எரித்திருந்தனர். இந்தச் செய்தி தலைவரின் காதுகளுக்கு எட்டியபோது இந்த விடயத்தை அவர் கண்டித்திருந்தார். ஒரு நாட்டின் தேசியக் கொடி என்பது மிகவும் புனிதமானது. எமது தேசத்தின் கொடியை வேறு நாட்டினர் எரித்தால் எமக்கு எத்தகைய கோபம் வருமோ, அதேபோலத்தான் அந்நாட்டு மக்களுக்கும் இருக்கும். அதே போல ஒரு இராணுவ வீரனின் உடலுக்கு உரிய மரியாதையை நாம் கொடுக்க வேண்டும் என்று கூறியதன் மூலம் அவரின் வித்தியாசமான பக்கம் ஒன்றை அறியக் கூடியதாக இருந்தது.

# சிங்களருக்கும் சமநீதி கோரிய தலைவர்

*தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் 50 ஆவது பிறந்தநாளையொட்டி 2004 ஆம் ஆண்டு 'ஈழ முரசு' சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டது. அதில் போராளிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டவர்களின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தினேஷ் என்ற போராளி எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.*

திருகோணமலை மாவட்டத்தில் எமது கட்டுப் பாட்டிலுள்ள மூதூர் பிரதேசத்தினுள் அமைந்த காட்டுப் பகுதியினுள் அயல் எல்லைக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பெண்மணி வழி தவறி வந்து விட்டார். அப்போது அங்கு வைத்து அச்சிங்களப் பெண்மணிக்குத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஒரு தமிழ் வாலிபன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விடுகின்றான். இதனை அச்சிங்களப் பெண்மணி எமது இயக்கத்தின் முகாமிற்கு வந்து முறைப்பாடு செய்தாள். உடனே எமது இயக்கப் போராளிகள் அனைவரும் தேடுதலில் ஈடுபட்டு அந்த வாலிபனை இறுதியாக ஆதாரங்களுடன் தேடிக் கண்டுபிடித்து விட்டார்கள். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியும் அவனை அடையாளங் காட்டிவிட்டார். அவ்வாலிபன் எமது இயக்கத்தினுடைய தீவிர உதவியாளனும், அங்கு பெரும்பாலான காட்டுப் பிரதேசங்களுக்கான வழிகாட்டியுமாவான். அவ்வேளை அச்சிங்களப் பெண்மணியானவள் அங்குள்ள தமிழ்ப் பெண்கள் சிலரின் உதவியுடன் அங்கு அமைந்துள்ள சிறிய வைத்தியசாலை ஒன்றிக்கு வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள்.

இச்செய்தியை மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் தேசியத் தலைவர் அவர்களுக்கு விரிவாக அறிவித்து என்ன செய்வதென்று கேட்டார். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியை வல்லுறவுக்கு உட்படுத்திய வாலிபன், அச்சிங்களப் பெண்மணியானவள் முன்பு தமிழர்கள் வாழ்ந்த அதே கிராமத்தில் தமிழர்களைத் துரத்தியடித்து விட்டு குடியேற்றப்பட்டவள் என்றும் அதே சிங்களக் குடியேற்றத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் எமது தமிழ்ப் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள் என்றும், அதனால்தான், தான் அந்தச் சிங்களப் பெண்மணியை வல்லுறவுக்கு உட்படுத்தியதாக நியாயப்படுத்தியும் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அத்தமிழ் வாலிபன் தமிழீழ விடுதலைப் போரட்டத்திற்குச் செய்த பங்களிப்புகளையும், அவன் இல்லாதுவிட்டால் அங்குள்ள பெரியதொரு காட்டுப் பிரதேசத்திற்கு வழிகாட்டி இல்லை என்பதையும் அந்தப் பொறுப்பாளர் அறிவித்திருந்தார்.

அதற்குத் தேசியத் தலைவர் அவர்கள் உறுதியாக, 'அனைவருக்கும் ஒரே நீதிதான்' என்றும், அச்சிங்களப் பெண்மணியை அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்புவதற்கு முன்பு அப்பெண் அறியக்கூடியதாக அவ்விளைஞனுக்கு மரண தண்டனை வழங்கும் படியும் அதன் பின்பு அப்பெண்ணைப் பாதுகாப்பாக அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்பும்படியும் அறிவித்திருந்தார். மறுநாள் தண்டனை நிறைவேற்றப்பட்ட விடயமும், சிங்களப் பெண் பாதுகாப்பாக அவரது கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரமும் பிரதேசப் பொறுப்பாளரால் தேசியத் தலைவர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்த தேசியத் தலைவர் அவர்கள் அங்கிருந்த தளபதிகளுக்குக் காட்டிவிட்டு, அனைவருக்கும் ஒரே நீதிதான் என்று உறுதியாகக் கூறினார்.

**சமூக விரோதிக்கும், விடுதலைப் போராளிக்குமான இடைவெளி மிக மிகக் குறைவு**

சமூகத்தில் விடுதலைப் போராளியும் கொலை செய்கின்றான். கொள்ளையடிக்கின்றான். வேண்டிய வாகனங்கள் மற்றும் உடைமைகளைப் பறித்துக் கொள்கின்றான். இதேபோன்ற சமூக விரோதியும் சமூகத்தில் கொலை செய்கின்றான், கொள்ளையடிக்கின்றான். வேண்டிய வாகனங்கள் மற்றும் உடைமைகளைப் பறித்துக் கொள்கின்றான். அப்படியானால் விடுதலைப் போராளிகளுக்கும், சமூக விரோதிக்கும் என்ன வேறுபாடு இருக்கின்றது. இருவருமே ஒரே செயலைச் செய்தாலும் இருவரினதும் மனதில் செயற்படத் தூண்டும் எண்ணமொன்று மட்டுமே வேறுபடுகின்றது.

சமூக விரோதி தனது சுய தேவைக்காக அல்லது பொறாமையினால் அல்லது கோபத்தினால் அல்லது மனவேதனையினால் இவற்றை மேற்கொள்கின்றான். விடுதலைப் போராளி தனது தேசத்தின் விடுதலைக்காகச் செய்கின்றான். இவற்றைக் கடமை உணர்வோடு, விடுதலையுணர்வோடு அவன் மேற்கொள்கின்றான். இவற்றை அவன் விரும்பிச் செய்வதில்லை. எனினும் தேசத்தின் விடுதலைக்கு அவசியமானபோது அவற்றைச் செய்கின்றான்.

விடுதலைப் போராளியும் சில சந்தர்ப்பங்களில் சமூக விரோதியாகலாம். அதற்கு உதாரணமாக நான் உங்களுக்கு ஒரு கதையைச் சொல்லுகின்றேன். 'நீங்கள் பாடசாலையில் படித்தீர்கள். அப்போது உங்களுடன் படித்த சக மாணவன் கல்வியிலும், விளையாட்டிலும் தொடர்ச்சியாகப் போட்டியிடுகின்றான். சில வேளைகளில் நீங்கள் வெல்லுவீர்கள். சில வேளைகளில் அவன் வெல்லுகின்றான். இவ்வாறு போட்டியிட்டுக் கொண்டிருந்த நீங்கள் தமிழீழ விடுதலைப் போரட்ட உணர்வினால் இயக்கத்தில் இணைந்து கொள்ளுகின்றீர்கள். ஆனால் அவனோ தொடர்ந்து கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி மருத்துவக் கல்லூரிக்குச் செல்கின்றான். மருத்துவராகின்றான். பணம் சம்பாதித்து சொந்தமாக ஒரு கார் வாங்கி வசதியாக இருப்பதைக் காண்கிறீர்கள்.

நீங்கள் ஒரு நாள் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது வீதியில் அவனது கார் உங்களுக்கு எதிரே வருகின்றது. உடனே உங்களுக்குப் பழைய ஞாபகங்கள் வருகின்றன. இன்றைய உங்களின் நிலையை அவனது நிலையுடன் ஒப்பீட்டுப் பார்த்து பொறாமை உணர்வு ஏற்படுகின்றது. இதன் விளைவால் நீங்களோ அல்லது வேறு விடுதலைப் போராளிகளூடாகவோ, அக்காரினை விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையெனக் கையகப் படுத்துகின்றீர்கள்.

இச்சம்பவத்தை வெளியிலிருந்து பார்க்கும் மக்களுக்கு ஏன் உங்களின் சக விடுதலைப் போராளிக்குக்கூட சிலவேளை நீங்கள் செய்யும் செயல் சரியாகப்படலாம். ஆனால் நீங்கள் செய்யும் செயல் சமூக விரோதச் செயல் என்பதை உங்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.' விடுதலைப் போராளிகளாகிய நீங்கள் இவற்றை மனதில் நிறுத்தி விடுதலை உணர்வுடன் உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு போதும் சமூக விரோதியாகி விடக் கூடாது என்று ஒருமுறை போராளிகள் மத்தியில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு தேசியத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

# இந்திய இராணுவப் பிடிக்குள் இருந்தபோது....

**மாலதி படையணி தளபதி, கேணல் விதுஷா எனும் யாழினி எழுதியுள்ள கட்டுரையிலிருந்து ஒரு பகுதி இது. இந்திய இராணுவத்தின் பிடிக்குள் தமிழ் ஈழம் இருந்த காலகட்டம். எந்த நேரத்திலும் பிரபாகரன் இந்திய இராணுவத்தின் பிடிக்குள் சிக்கி விடும் ஆபத்துகள் சூழ்ந்து நின்றது. பாதுகாப்பற்ற மணலாறு பகுதியில் பிரபாகரன் இருந்தபோது காட்டுக்கு வெளியே இருந்த கேணல் கிட்டு, பிரபாகரன் பாதுகாப்புக் கருதி ஆயுதங்களை தற்காலிகமாக சரணடையச் செய்து விடலாம் என்ற யோசனையை முன்வைத்து கடிதம் ஒன்றை அனுப்பினார். அதை பிரபாகரன் எதிர் கொண்ட வரலாற்றை விளக்குகிறது இக்கட்டுரை.**

தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்கின்ற இன்னுமொரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். 'இந்தப் போராட்டத்தில் ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளைத்தான் செய்கின்றனர். நானும் அப்படியே. இதுவரை இனத்துக்கான எனது பணி முடிவடையவில்லை. எனது மக்களுக்காகத் தாயகத்தைப் பெற்றுக் கொடுத்த பின்னர்தான் எனது பணியை முழுமையாகச் செய்தேன் என நிறைவடைய முடியும்' என்றார். இவ்வாறு தனது பணியிலேயே நிறைவடையாத இயல்பு அவருடையது.

இதுவரை காலமும் போராட்டத்தை முழு வீச்சுடன் வழி நடத்துகின்ற தலைவரது நெஞ்சுரம் அளவிட முடியாதது. அந்த உறுதிதான் எமது போராட்டத்தை இன்று உலகம் வியக்கும் வண்ணம் மாற்றியுள்ளது. அக்காலப் பகுதியில் மணலாற்றுக் காட்டில் தலைவரோடு இருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கு நாம் குறிப்பிடுவது பொருத்தமானது. உணவு, நீர் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலேயே பெரும் நெருக்கடிகளை சந்தித்த நேரம் அது. காட்டினுள் இருந்த எமக்கும் மக்களுக்குமான நேரடித் தொடர்புகள் இந்திய இராணுவத்தால் தடைப்பட்டிருந்த காலம். காடு முழுவதும் எங்கு பார்த்தாலும் இராணுவத்தின் ரோந்து அணிகள். தலைவருக்குக் கூட திட்டங்களை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பான இடம் என்று எதுவுமே இல்லாத நேரம். இந்த நிலையைப் புரிந்துகொண்டு காட்டுக்கு வெளியில் இருந்து கேணல் கிட்டு அவர்களால் அனுப்பப்பட்ட தலைவரின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகள் தொடர்பான செய்தியை எமக்கு தெரிவித்து, 'எனது உயிருக்காக மறுபடி ஒரு ஆயுத ஒப்படைப்பு நடக்க அனுமதிக்க மாட்டேன். நான் வீரச் சாவு அடைந்தால், இன்னொரு பிரபாகரன் அல்லது பிரபாகரியாவது தோன்றி இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும். நீங்கள் எல்லோரும் இதில் உறுதியான முடிவை எடுக்க வேண்டும். இந்தக் கடினங்களுக்கு ஈடு கொடுத்து போராடும் மனநிலை யாருக்காவது இல்லையெனில் அவர்களைப் பாதுகாப்பாக அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கின்றேன். நான் விலங்குகளைச் சுட்டுச் சாப்பிட்டாவது இந்தப் போராட்டத்தைத் தொடர்வேன்' என்றார். தலைவர் இவ்வாறு சொல்லும்போது அங்கிருந்த பெண் போராளிகளில் ஒருவரும் இளநிலை அதிகாரியாகக் கூட வளர்ந்திருக்கவில்லை. இந்தச் சம்பவத்தின் மூலம் தலைவர் அவர்களது இலட்சியப் பற்றையும், எம்மீது கொண்ட நம்பிக்கையையும் நேரடியாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. கொண்ட கொள்கையில் உறுதியும் விடாமுயற்சியுடன் கூடிய இலட்சியப் பற்றும் தனது நலனையோ உயிரையோ பெரிதாக எண்ணாது நாட்டுக்காக எதையும் செய்வேன் என்ற தலைவரின் உறுதியான நெஞ்சுரமும்தான் இந்திய இராணுவத்தை எமது மண்ணிலிருந்து திருப்பியனுப்பி, சரித்திரத்தில் மகத்தான மாற்றத்தைக் கொண்டு வந்தது.

இத்தகைய அற்புதமான தலைவரின் அடிமன விருப்பு எதுவாக உள்ளது என்பதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும். அண்மையில் நடந்த துரோகத்தனமான சம்பவத்தின் பின் ஒருநாள் தலைவர் கதைத்துக் கொண்டிருந்தபோது பின்வருமாறு தனது மனஉணர்வை வெளிப்படுத்தினார். 'இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்துவதற்கு சிறந்ததொரு தலைமை கிடைக்குமாயின், தான் இந்த நிலையைவிட்டு சாதாரண ஒரு போராளியாக சண்டையிடும் அணிகளுடன் நிற்கவும், மிதிவண்டியில் சென்று கிராம மக்கள் மத்தியில் வேலை செய்வதும் தான் விருப்பம்' என தனது மனவிருப்பை வெளிப்படுத்தினார். 1993 இல் காயப்பட்ட போராளிகளின் நலன் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் 'தமிழீழம் கிடைத்த பின்னர் எனது பணி, விழுப்புண்ணடைந்த போராளிகள் சார்ந்ததாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் சார்ந்ததாகவும் முழுமையாக இருக்கும்' என்று கூறியதை மேற்கண்ட கூற்று மீள எனக்கு நினைவுபடுத்தியது.

'எமது போராட்டம் இன்று உலக அரங்கில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. இவ்வாறு

(2 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 27.11.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# நன்கொடை திரட்டும் மக்கள் சந்திப்பு இயக்கம்

# மாநில கழகப் பொறுப்பாளர்கள் மாவட்டந்தோறும் தோழர்களுடன் சந்திப்பு

‘ஒவ்வொருவரிடமும் ரூ.10 நன்கொடை’ என்ற மக்கள் சந்திப்புத் திட்டத்தின் கீழ் திராவிடர் விடுதலைக் கழகம், நன்கொடை திரட்டும்இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு கழகத்தோழரும் இத் திட்டத்தின் கீழ் ரூ.10000 நன்கொடை திரட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ‘நண்பர்களை தோழர்களாக்குதல், தோழர்களை இயக்கமாக்குதல்’ என்ற முழக்கத்தின் கீழ் ஒவ்வொரு தோழரும் கழகத்துக்கு 5 புதிய உறுப்பினர்களை இணைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கழகத் தோழர்களை மாவட்டம் தோறும், பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் ஆகியோர் சந்தித்து வருகிறார்கள்.

நவம்பர் 20 ஆம் தேதி கோபியில் ஈரோடு மாவட்டக் கழகத் தோழர்களையும், 21 ஆம் தேதி காவலாண்டியூர், கொளத்தூர், மேட்டூர் தோழர்களையும், 22 ஆம் தேதி காலை பி.அக்ரகாரம் என்ற ஊரில் தர்மபுரி தோழர்களையும், அன்று மாலை காவேரிப்பாக்கத்தில் கிருட்டிணகிரி தோழர்களையும், 23 ஆம் தேதி காலை சிந்தாமணியூரிலும், மதியம் ஏற்காட்டிலும், மாலை சேலம் நகரிலும், இரவு இளம்பிள்ளையிலும், சேலம் மாவட்டத் தோழர்களையும், 24 ஆம் தேதி காலை பெங்களூரில் கழகத் தோழர்களையும் சந்தித்துப் பேசினர்.

கழகத் தலைவர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சூழல், இயக்கம் முன்னுரிமை தந்து முன்னெடுக்க வேண்டிய செயல்பாடுகள், திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கியது முதல் மேற்கொண்டு வரும் களப்பணிகள் போன்ற பிரச்சினைகளை கழகத் தோழர்களிடம் எடுத்துரைத்து கலந்துரையாடினர். சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், தோழர்கள் மிகவும் உற்சாகம் பெற்றுள்ளதாகவும், கழகப் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர். நன்கொடைக்கான புத்தகங்கள், துண்டறிக்கைகள் தோழர்களிடம் வழங்கப்பட்டு வருகின்றன.

மீண்டும் திண்டுக்கல்லிருந்து இரண்டாம் கட்டப் பயணத்தை கழகப் பொறுப்பாளர்கள் தொடங்குகிறார்கள்.

## சலிப்பற்ற சுயமரியாதைத் தொண்டு

என்ன காரணத்தாலோ நாம் சவுக்கியமாக உயிர் வாழ்கின்றோம். எப்படியோ உயிர் வாழ்வுக்கு மற்ற எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாத நிலைமையில் இருந்து வருகின்றோம். மனிதனுக்கு இந்த இரண்டு காரியந்தான் மேலான சம்பத்து ஆகும். அதாவது உழைக்க உறுதியும் ஆசையும் - அதாவது சோம்பறித்தனமும் கழிப்பிணித்தனமும் இல்லாத, திடம் உள்ள சரீரமும் தனது வாழ்வில் எந்தத் துறைக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவோ, தனக்குச் சரியென்று தோன்றிய அபிப்பிராயங்களை - முடிவுகளை தனது வாழ்க்கைக்காக - வாழ்க்கை நலத்துக்காக - மற்றவர்களின் தயவுக்காக மாற்றிக் கொள்ளவோ வேண்டிய அவசியமில்லாத - சாகும் வரை சுதந்திர உணர்ச்சியுடன் இருக்கத் தகுந்ததிலே எதுவோ அதுவே மேல்கண்ட உயர்ந்த சம்பத்தாகும். அப்படிப்பட்ட நிலையில் நான் இருப்பதால் (இருக்கிறதாக நான் நினைத்துக் கொண்டிருப்பதால்) அந்த நிலையைப் பாழாக்குவதற்கு இஷ்டமில்லாமல் பயனுள்ள வேலையென்று எதைக் கருதுகின்றேனோ அதைச் செய்கிறேன் என்பதல்லாமல் வேறு எவ்விதப் பிடிவாதமும் எனக்குக் கிடையாது.

நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியாகத்தான் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருதமாட்டேன். எதையும் நான் குறையாய் விட்டுவிட்டுப் போகிறேன் என்று அதிருப்திப்பட மாட்டேன். நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்து தானே ஆகவேண்டும்? ஏதாவது ஒரு வேலையில்லாமல் உயிர்வாழ முடியாதே என்று கருதி ஏதோ ஒரு வேலை என்பதில் இதை அதாவது ஜாதி, மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறேனோ அந்த வேலையைச் செய்கிறேன். இந்த உணர்ச்சி வலுத்துத்தான் அதே முக்கியமானதும் முடிவானதுமான வேலையென்று இறங்கிவிட்டேன். இந்த எண்ணத்தின் மீதே சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தேன். இந்த எண்ணம் கைகூடினால் மனித சமூகத்தில் உள்ள போராட்டங்கள் மறைந்துவிடும். தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கிவிடும். தனக்கு என்கின்ற பற்றும் ஒழிந்துவிடும். உற்சாகத்துக்காக வேண்டுமானால் போராட்டங்களும் குறைகளும் அதிருப்திகளும் கவலைகளும் இருக்கலாம்.

அதாவது, பண்டிகைக்காக ஓய்வெடுத்துக் கொண்ட மக்கள் பலர் கூடி சதுரங்கமோ சீட்டாட்டமோ விளையாடும்போது யோசனைகள், கவலைகள், அதிருப்திகள் காணப்படுவதுபோல் இயற்கையின் ஆதிக்கத்தால் நமது வாழ்வுக்கு அவசியமில்லாததும் பாதிக்காததுமான யோசனை, கவலைகள் முதலியன காணப்படலாம். இவை எந்த மனிதனுக்கும் மனிதனல்லாத மற்ற எந்த ஜீவனுக்கும் உயிருள்ளவரை இருந்துதான் தீரும். “சரீரமில்லாத ஆத்மாவுக்கும் கண்ணுக்குத் தெரியாத சூட்சும சரீரத்திற்கும்” கூட ‘மோக்ஷமும்’, ‘முக்தி’யும் கற்பித்திருப்பதில் ஜீவனுக்கு வேலையில்லாமலும் அனுபவமில்லாமலும் மோக்ஷம் - முக்தி கற்பிக்க முடியவில்லை. ஆதலால் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டி இருந்து தீரவேண்டியதை உத்தேசித்து இந்த வேலையை நான் மேற்கொண்டேன்.

இதைத்தான் நிஷ்காமிய கர்மம் என்று சொல்லலாம். மற்றபடி காமிய கர்மத்துக்குப் பலன் இல்லையென்றும் சொல்லலாம். நிஷ்காமிய கர்மத்துக்குத்தான் பலன் உண்டு என்றும் சொல்லப்படுவது முன்னுக்குப் பின் முரணான கருத்தேயாகும். எப்படியெனில், நிஷ்காமிய கர்மமென்பதை அதாவது பயனை எதிர்பார்க்காத காரியத்தை ஒரு மனிதன் எதற்கு செய்ய வேண்டும்? நிஷ்காமியமாய் செய்தால்தான் பலன் உண்டு என்றதாலேயே ‘ஒரு பலன் ஏற்பட வேண்டும்’ என்பதற்காக வேண்டி செய்வது என்பது அருத்தமாகிறது அல்லவா? ஒரு மனிதன் ஒரு பலனை எதிர்பார்த்து காரியம் செய்கிறது என்பதில் எப்படிப்பட்ட காரியமானாலும் அதன் கவலை அவனைப் பீடித்துத் தான் தீரும்.

ஆனால், உண்மையிலேயே நாம் ஜீவனுள்ள வரையில் ஏதாவது காரியம் செய்ய வேண்டுமே என்பதற்காக அதுவும் அந்த வேலையைத் தெரிந்தெடுக்க நமக்குச் சரியாகவோ தப்பாகவோ உரிமையிருக்கிறது என்பதாகவே. இந்த வேலை - சுயமரியாதை இயக்க வேலை செய்து வருகிறேன். ஆனால், இந்த வேலை நமக்கு எப்போதாவது ஏமாற்றத்தைக் கொடுத்து சலிப்பாக வேலை செய்யச் செய்யவில்லை. உற்சாகத்தையே ஊட்டி வருகிறது.

**– பெரியார் ‘குடிஅரசு’ 18.7.1937**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு, அறிவுரைக் குழுமத்தின் முன் நிறுத்தப்பட்டபோது அங்கிருந்து மூத்த நீதிபதிகளிடம், உங்கள் மீது எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆனாலும் நீங்கள், என்னை வழக்கிலிருந்து விடுவிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. மூத்த நீதிபதிகளாகிய நீங்கள் உறுதி செய்யும் இந்தத் தண்டனையை உயர்நீதிமன்றத்தில் இளம் நீதிபதிகளால் ரத்து செய்யப்பட்டு, உங்களின் தீர்ப்புகள் புறந்தள்ளப்பட்டு விடுகிறதே என்ற வருத்தம்தான் எனக்கு உள்ளது” என்று குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், “காமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவின் பங்கேற்பை எதிர்த்துப் போராட்டங்கள் நடந்தபோது இந்தக் கைது நடவடிக்கைகள் நிகழ்ந்ததால், கவனம் திசை திரும்பிவிடக் கூடாது என்ற நோக்கத்தோடு மத்திய அரசுக்கு எதிராகவே எங்கள் போராட்டம் தொடரும் என்று நாங்கள் அறிவித்தோம். உடனே சில ‘அறிவு ஜீவிகள்’ தமிழக அரசை எதிர்க்க பயப்படுவதாக எங்களை கேலி செய்தார்கள். காமன்வெல்த் பிரச்சினை முடிந்த பிறகு இப்போது தமிழக அரசை எதிர்த்து நாங்கள் கண்டனக் குரல் கொடுக்கிறோம். அடக்குமுறை சட்டங்களை உறுதியாக எதிர்ப்பது திராவிடர் விடுதலைக் கழகத்தின் கொள்கையாகும். கொள்கை எதிரிகளைக்கூட அடக்குமுறை சட்டங்களின் கீழ் கைது செய்ய வேண்டும் என்று ஒரு போதும் நாங்கள் வலியுறுத்தியது இல்லை. தமிழ்நாட்டில் ஜாதிவெறிக்கு கூட்டணி அமைத்த மருத்துவர் இராமதாசின் ஜாதிக் கூட்டணியை நேரடியாக எதிர்த்து களமிறங்கியவர்கள் நாங்கள். அப்போதுகூட பா.ம.க.வினர் மீது குண்டர் சட்டங்கள் தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் பயன்படுத்தப்பட்டதை நாங்கள் ஆதரிக்கவில்லை.

பொதுவாக அடக்குமுறைச் சட்டங்கள் தமிழின உணர்வாளர்கள், இஸ்லாமியர்கள், தலித் மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வருகிறன்றன. பார்ப்பன ஊடகங்கள் உரிமை மறுக்கப்பட்ட இந்த மக்களின் போராட்டங்களை தேச விரோத நடவடிக்கைகளாகவே சித்தரிக்க முற்படுகின்றன. பாட்னாவில் மோடியின் கூட்டத்தில் குண்டு வீச்சு நடந்தவுடன் அன்றைக்கே இது இஸ்லாமிய பயங்கரவாதிகள் சதி என்று ஊகித்து ஊடகங்கள் விவாதங்களை நடத்தத் தொடங்கிவிட்டன. இப்போது பா.ஜ.க. கட்சியைச் சார்ந்தவர்களும் ‘இந்துக்கள்’ நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

இந்த உண்மைகள் ஊடகங்களால் இருட்டடிக்கப்படுகின்றன. திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்தும் இனத்துக்கான விடுதலை - உரிமைகள் மறுக்கப்பட்ட இஸ்லாமியர் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை உள்ளடக்கிய விடுதலைதான். பார்ப்பனிய ஜாதியத்துக்கு எதிரான மக்கள் விடுதலையே பெரியார் வலியுறுத்திய இன விடுதலைப் போராட்டம்.

முள்ளி வாய்க்கால் முற்றத்தின் சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டதையும் பழ. நெடுமாறன் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டதையும் திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. அங்கே பெரியார் படம் இடம் பெறவில்லை என்பதை நாங்கள் கண்டித்தாலும், அதை விவாதிக்க வேறு தளம் உண்டு. அதைவிட முள்ளி வாய்க்கால் முற்றம் என்ற மாபெரும் நினைவுச் சின்னத்தை மதிக்கிறோம். அதை அவமதிக்கும் தமிழக அரசின் அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் மற்றும் தோழர்களின் கைதுக்கு எதிராகவும் அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்க முன்வந்த தோழமை சக்திகளுக்கு நன்றி தெரிவிக்கிறோம். அரசு அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்” என்று குறிப்பிட்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 28th November 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN